# பண் மகள்
# போஷேந்திர மலர்

யா/பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை

2004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண் மகள்
# போஷேந்திர மலர்

மணிவிழாக்காணும் செல்வி போஷேந்திராதேவி கந்தசாமி
அவர்களின்

## சேவை நயப்பு விழா மலர்

யா/பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை - 2004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலர்க்குழு

திருமதி. கி. சிவராஜா (உப அதிபர்)

திருமதி. இ. இராஜசேகரம்

திருமதி. கோ. சிறீகரன்

திருமதி. ம. குணபாலன்

திரு. வே. சிவசக்திவேல்

திரு. பொ. அமிர்தலிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது அதிபர்



செல்வி போஷேந்திராதேவி கந்தசாமி

B.A (Hons) Post Graduate Diploma in Education S. L. P. S. Grade I

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவிழாக்காணும்

## செல்வி போஷேந்திராதேவி கந்தசாமி அவர்களின்

# சேவை நயப்பு விழா

**இடம்:** **யா/பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை**
**காலம்:** **17.01.2004 காலை 9.30 மணி**

**பிரதம விருந்தினர்:**

**கலாநிதி க. குணராசா அவர்கள்**

(பிரதேச செயலர், தெல்லிப்பழை)

**கௌரவ விருந்தினர்:**

**திருமதி. றெஜினா இருதயநாதன் அவர்கள்**

(வலயக்கல்விப் பணிப்பாளர், வலிகாமம் வலயம்)

**சிறப்பு விருந்தினர்:**

**திரு. சு. சுந்தரசிவம் அவர்கள்**

(பிரதிக்கல்விப் பணிப்பாளர், நிர்வாகம், வலிகாமம் வலயம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியின் அதிபர் செல்வி போ. கந்தசாமி அவர்களின் பிரியாவிடை மலருக்கு அதிபர் நயப்பாக வழங்கும்

# வாழ்த்துச் செய்தி

யாழப்பாணத்தில் வடபால் இயங்கும் பெண்கள் கல்லூரியாகிய யா/பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி அதிபர் ஓய்வு பெறுகின்ற இந்நாளில் அவரிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். அகவை அறுபது கழிந்தும் வளமுடன் வாழ வாழ்த்துவதற்கு உரிமைகளைப் பெற்றுக்கொள்கிறேன். மாணவியாக, ஆசிரியராக, அதிபராகப் பலவேறு மட்டங்களில் உரிமையுடன் பழகியவர். நான் அவரது ஆசானாக, சக ஆசிரியையாக, என்வழி வந்த அதிபராக இருந்த எமது அன்புக்கினிய 'போசா' புவியியற் துறையில் சிறப்புப் பட்டம் பெற்றவர். தனது சகபாடிகளின் நம்பிக்கைக்கு உகந்தவராக விளங்கியவர். மாணவியாக இருந்த பொழுதும் சக ஆசிரியையாக இருந்த பொழுதும் எல்லோரையும் சமமாக, அன்பாக மதித்தவர். ஆசானாக இருந்த பொழுது மிகுந்த பொறுப்புணர்ச்சியுடன் கற்பித்தமையால் இன்றும் மானிப்பாய் இந்துவின் பழைய மாணவரின் சிந்தனையில் சிதறாமல் உள்ளவர். மானிப்பாய் இந்துவில் புவியியலைப் புவியியலாக கற்பித்ததுடன் சமூகக் கல்வி கற்பிப்பதிலும் சமர்த்தர். இவரது எவர்க்கும் உதவும் பண்பு, உள்ளதை உள்ளவாறே வெளிச்சொல்லும் பாங்கு, தன்னம்பிக்கையுடன் துணிந்து செயற்படும் தன்மை, தான் பொறுப்பெடுத்த சகலதையும் பொறுப்புடன் நிறைவேற்றி வைக்கும் பாங்கு அவரை அதிபராக உயர்த்தியது. பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியின் இடப் பெயர்வின்போதும் மனம் சளைக்காது இடத்திற்கிடம் நகர்த்திப் பாடசாலையை நடத்தியவர். நோய்வாய்ப்பட்டு இருந்த பொழுதும், குணப்பட்டு வந்தபின்பும் பாடசாலையின் வளர்ச்சியில் அல்லும் பகலும் உழைத்தவர். தனது சக ஆசிரியைகள், தமது தலைமைத்துவத்தில் பணிபுரியும் ஆசிரியைகள் யாவரின் உள்ளங்களிலும் இடம் பெற்றுவிட்ட இளைப்பாறுகின்ற அதிபர் வளமுடன் நீடூழி வாழ இறைவன் அருள் பாலிக்கட்டும்

**திருமதி. எஸ். மகாலிங்கம்**
**மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்,**
**யாழ் மாவட்டம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் ஆத்மாவிலிருந்து ...

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி அதிபர் செல்வி போஷேந்திராதேவி கந்தசாமி அவர்களின் சேவையைப் பாராட்டி வாழ்த்துவதில் மிகுந்த மனநிறைவடைகின்றேன். பல்கலைக்கழக சகபாடியாக இருந்த காலம் முதல் இன்றுவரை அவரது அசைவுகள் யாவும் அகத்தூய்மை நிறைந்ததாய் ஒப்பற்ற கடமை உணர்வுள்ளதாய் அமைந்திருந்தது. அன்பு, இரக்கம், கண்டிப்பு யாவும் சமமாக அவரிடம் காணப்பட்டது. நல்லதோர் புவியியல் ஆசிரியராய் இருந்தார். நல்லதோர் கொத்தணி அதிபராய் இருந்தார். கடினமான காலச் சூழ்நிலையில் குண்டு வீச்சுக்களின் மத்தியில் கொத்தணி அதிபராக பாடசாலைத் தரிசிப்புக்களை அவர் மேற்கொண்டிருந்தார். பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி இடம்பெயர்ந்து இயங்கிய வேளையிலும் பழம் பெருமை குன்றாது அதனைப் பாதுகாத்துக் கொண்டவர். தமது சொந்தப் பணத்தையே தனது கல்லூரியின் வளர்ச்சிக்காக அர்ப்பணித்தவர், உடல் ஆரோக்கியம் குறைந்து நின்ற வேளையிலும் மனவலிமை குன்றாமல் பணிசெய்தவர். ஆசிரியர்களை நண்பர்களாக்கி நிர்வாகம் செய்தவர். பழைய மாணவர், பெற்றோருடன் அன்புறவைப் பேணி வழிகாட்டியவர். முகநக நட்பில்லாமல் நெஞ்சத்து அக, நக நட்புடையவர். வலயத்தின் நிர்வாகக் கஷ்டங்களைப் புரிந்து கொண்டு ஒத்துழைப்பு வழங்கியவர். பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியைப் பழைய நிலைக்குக் கொண்டு வருவதற்காகத் தன்னை முழுவதுமாக அர்ப்பணித்தவர். வலயத்தின் சார்பாக மாத்திரம் வாழ்த்தவில்லை. நெஞ்சத்து அக, நக நட்புடன் வாழ்த்துகின்றேன்; என் ஆத்மாவிலிருந்து வாழ்த்துக்கள் எழுவதை நான் உணருகின்றேன்.

திருமதி. றெஜினா இருதயநாதன்
வலயக் கல்விப் பணிப்பாளர்,
வலிகாமம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண் மகளிர் கல்லூரியின் தளர்வு நிலையினைத் தடுத்தாட்கொண்ட சக்தி தேவி

யா/பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியானது வட்டுக்கோட்டைத் தொகுதியில் தனித்துவம் மிக்க வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்ட கல்லூரியாகும். யாழ் குடாநாட்டில் விரல் விட்டு எண்ணக் கூடிய மகளிர் கல்லூரிகளில் ஒன்றாக சிறப்புற்று விளங்கியது. 1992ஆம் ஆண்டு இப் பாடசாலை அமைந்துள்ள பிரதேசம் எதிர்நோக்கிய யுத்த நெருக்கடி காரணமாக இடம்பெயரவேண்டிய இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டது. அந்நிலையில் அதுவரை கடமையாற்றிய அதிபர் இடமாற்றம் பெற்றுச் சென்றுவிட, தற்துணிவுடனும் கடமையுணர்வுடனும் இடம் பெயர்ந்த நிலையில் இயங்கி வந்த பாடசாலையைப் பொறுப்பேற்றார். கல்லூரியில் தானும் ஒரு அங்கத்தவராக இணைந்து கொண்டு கல்விசார் செயற்பாடுகளை உயிரோட்டத்துடன் நிகழ வழிவகுத்தார்.

1995ஆம் ஆண்டில் இடம் பெற்ற தொடர்ச்சியான யுத்த நெருக்கடிகளின் மத்தியில் பல்வேறு இடங்களுக்கும் சமூகச் சூழ்நிலைக்குப் பொருத்தமுற பாடசாலையினை நகர்த்தி கல்விச் செயற்பாடுகளை திறம்பட செயற்படுத்தினார்.

பண்டத்தரிப்பு பட்டின சபை பகுதியில் பற்றைகளால் சூழப்பட்டு யுத்தத்தினால் கட்டடங்கள்சேதமுற்ற நிலையில் ஆளரவமற்ற சூழலில் காணப்பட்ட கல்லூரியை மீண்டும் ஆரம்பிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டார். பற்றைகளுக்கும் மிதிவெடிகளுக்கும் நடுவே அஞ்சாமல் அவற்றை அகற்றி பாடசாலைப் புனரமைப்புப் பணிகளை மேற்கொண்டார். இதன் மூலம் வெளியேறிய கிராம மக்கள் மீள குடியமர்வதற்கு வழிசமைத்தார். இடம் பெயர்ந்த ஏனைய பாடசாலைகளுடன் ஒப்பிடுகையில் இப்பாடசாலைக்கு சமூகத்தினர் ஆதரவும் நிதியுதவியும் மிகக் குறைவாகும். இதற்குக் காரணம் இப் பாடசாலையைப் பிரதிநிதித்துவப் படுத்திய கல்விச் சமூகத்தினர் நிரந்தரமாகவே இடம்பெயர்வுக்குள்ளாகினர். இந்நிலையில் கல்வித் திணைக்களத்தினால் அவ்வப்பொழுது ஒதுக்கீடு செய்யப்பட்ட சிறு நிதியுதவியுடன் தனது சொந்த நிதியையும் பயன்படுத்தி கட்டடங்களை புனரமைப்புச் செய்தார். ஏனைய இடம்பெயர்ந்த பாடசாலைகளுக்கு அரச சார்பற்ற நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்ட உதவிகளுடன் ஒப்பிடுகையில் இப் பாடசாலைக்கு அவர்கள் நல்கிய பங்களிப்பு மிகக் குறைவானது என்பது கசப்பானதோர் உண்மையாகும். ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக மாணவர்கள் பாதிப்படையக் கூடாது என்பதற்காக தனது சொந்தப் பணத்தில் ஆசிரியர்களை நியமித்து கொடுப்பனவுகளை வழங்கி அரும்பணியாற்றினார். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, எளிமை, நேர்மை, நீதி என்பவற்றை அணிகலனாகக் கொண்டு செயற்பட்டார். இவரது சிந்தனை, சொல், செயல் மூன்றும் ஒருமித்ததாகவே செயற்படுவதை அவதானிக்க முடியும். தூயவுள்ளத்துடன் இயல்பாகப் பழகும் இயல்புடையவர். மனவுறுதியுடன் தனது சேவையை 60 ஆம் அகவை வரை பாடசாலைக்கு நல்கி இளைப்பாறிச் செல்லும் இவர் வீரம் மிக்க மங்கையர் திலகமாக கல்லூரி வரலாற்றில் முத்திரை பதித்துள்ளார். இவரது சீரிய பணி இறையாசிக்குட்பட்டது. சாதாரண மனிதர்களால் மதிப்பிட முடியாதது. இவரது எதிர்கால வாழ்வு ஆன்மீக ரீதியாக மகிழ்ச்சியுடன் சிறப்பாக அமைய இறைவனது நல்லாசிகளை வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

**திரு. சு. சுந்தரசிவம்**
பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
வலிகாமம் கல்வி வலயம், மருதனார் மடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

யாழ் மாவட்டத்தின் தலை சிறந்த மகளிர் கல்லூரிகளில் ஒன்றாகப் பல தசாப்தங்களாக விளங்கிய யா/பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியின் அதிபர் பொறுப்பை குடாநாட்டின் அரசியல்நிலை குழப்பம் அடைந்திருந்த காலத்தில் பொறுப்பேற்றார். ஆயின் பொறுப்பேற்ற காலத்தில் இருந்து இராணுவ நடவடிக்கை காரணமாகப் பல இடப்பெயர்வுகளைச் சந்தித்த போதும் துணிச்சலோடு வெவ்வேறு இடங்களில் பாடசாலையை நடாத்தி பாடசாலையின் தனித்துவத்தைக் கட்டிக் காத்த பெருமை இவ்வதிபரையே சாரும்.

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் புவியியல் விசேட பட்டதாரியாகக் கல்வி கற்ற காலத்திலிருந்தே இவரை நான் அறிவேன். பின்னர் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் மிகச் சிறந்த சமூகக்கல்வி ஆசிரியராகப் பல வருடங்கள் கடமையாற்றிய காலத்திலும் இவரை அறிந்திருந்தேன். கொத்தணி அதிபராக இருந்து பண்டத்தரிப்பு பாடசாலைகளைச் சிறந்த முறையில் வழிநடாத்தியமையும் யாவரும் அறிந்த விடயமாகும்.

1996இல் மீளக்குடியமர்வின் பின் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியைக் கட்டி எழுப்புவதில் அயராது உழைத்தவர். கல்விப் பெறுபேறுகளிலும் சிறப்பாக இணைப்பாட விதானச் செயற்பாடுகளிலும் மாணவர் திறனை வளர்ப்பதில் குறிப்பிடத்தக்க வெற்றிகளைக் கண்டவர்.

60 வயதைப் பூர்த்தி செய்து கல்வி உலகிற்கு அரும்பணியாற்றி இளைப்பாறும் இவ்வதிபரின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் பெரும் மகிழ்ச்சி அடையும் அதே வேளையில் ஓய்வுக்குப்பின் சாந்தி சமாதானத்துடன் உடல் உள ஆரோக்கியத்துடனும் நீண்ட காலம் வாழ இறைவன் அருளை வேண்டி வாழ்த்துகிறேன்.

**க. தனபாலசிங்கம்**
கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
சண்டிலிப்பாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Message from the Deputy Principal

If gives immense pleasur and I deem it as an honour in giving a message of felicitation to the issue "pann Magal" released in appreciation of th service of our dear principal Miss. Posenthirathevy Kandasamy, in the capacity as the principal and a post past pupil of pandateruppu Girls' High School.

Miss. P. Kandasamy took charge of our school on the 9th September 1992 as a Grade 1 principal of the Sri Lankan Principal Service. It was a period of crisis, tension, turmoil and great stress in our country. With courageous sprit and challenge she stepped in at Sithenkerney where our school was functioning. She had to undergo many hardship to conduct the school. Teachers and students have got displaced. the physical resources for the development of education were not available. But our pricipal stove up with dareness and duty bound spirit and geared through with great enthusiasm. She had inspired the staff and students to bear up all the short comings and persue the most treasured wealth of the Jaffna Community "The Education".

During her period of the twelve years, she has built back the school with its traditional heritage and strength. She is a person of great knowledge and wisdom. Always ready to face anything and every thing for the upliftment of our institution. The school and its community should be ever grateful to the dedicated services rendered by our madam.

I wish our principal, God's choicest blessing in the day to come.

**Mrs. K. Sanmuganathan**
Deputy Principal,
J/Pandateruppu Girls' High School.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அன்பு அதிபருக்கு...**

அகவை அறுபதில் தன் சேவையை நிறைவு செய்யும் என் அதிபரின் "போகேஷந்திர மலர்" அதற்குச் சில வரிகள் சமர்ப்பிப்பதையிட்டுப் பேருவகை அடைகின்றேன். தொண்ணூறுகளில் பேருந்துப் பயணத் தோழியாக அறிமுகமாகிய எம் அதிபரின் உறவு, பாடசாலைப் பெண் சாரணியத்தினால் மேலும் விரிவடைந்து 2002ல் அவரின் கீழ் பதவி ஏற்றதனால் இறுக்கமடைந்தது. பழகுவதற்கு மிக இனிமையானவர்; எளிமையானவர். கடமையிலே கண்ணியமானவர். எல்லாவற்றுக்கும் மேலாக பெண்கள் பாடசாலை என்றபடியால் கண்காணிப்பும் கண்டிப்பும் மிக்கவர்.

சுமுகமான சூழலிலே ஒரு பாடசாலையை வளர்த்தெடுப்பதுவே பெரும் பணியாக அமையும்போது, போர்க்காலச் சூழலிலே, அத்துடன் இடப்பெயர்வுகளிலே இந்தப் பாடசாலையைக் கட்டிக்காத்து மீண்டும் தன் சொந்த இடத்திலேயே இயங்கவைத்த பெருமை இவரைச் சாரும். பௌதிக வளங்கள் அனைத்தையும் இழந்துவிட்ட எமது பாடசாலையை இன்று மீண்டும் தலை நிமிர்ந்து நிற்க வைத்த அயராத முயற்சிக்காக, பழைய மாணவி என்ற ரீதியில் அவரை மனம் நிறையப் பாராட்டுவதுடன் ஆத்மார்த்த நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன். உடல் நலம் குன்றியிருந்த போதும் கூட பாடசாலையைப் பற்றிய எண்ணமாகவே அவர் இருந்த பாடசாலைப் பற்றை எண்ணிப் போற்றுகின்றேன்.

சிறந்த ஆசிரியராகவும், கொத்தணி அதிபராகவும், அதிபராகவும் தனது சேவையை, பார்போற்றும் சிறப்போடு ஆற்றிய எமது அதிபர் ஓய்வு பெற்றாலும் கூட அவர் எண்ணங்களில் எமது பாடசாலை நிதமும் நிழலாடும். அவரது வாழ்த்துக்களும் வழிகாட்டல்களும் மேலும் எமது பாடசாலையை வளம்படுத்த வேண்டும். அவர் நீண்ட நெடுங்காலம் எல்லா சுகங்களுடனும் வாழ ஆண்டவன் அருள்பாலிக்க வேண்டும்.

**திருமதி. கி. சிவராஜா**
உதவி அதிபர்,
யா/பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்பின் இலக்கணமான அதிபர்

செல்வி போஷேந்திரா கந்தசாமி எனது அன்புத் தோழி. 1967 ஆம் ஆண்டு முதல் என் மதிப்பிற்கும் அன்பிற்கும் பாத்திரமாக விளங்குகின்றார். 1966 ஆம் ஆண்டு முதல் 1970 ஆம் ஆண்டு வரை நாம் இருவரும் பேராதனைப் பல்கலைக் கழகத்திலே ஒன்றாக கற்கும் பாக்கியம் கிடைத்தது. அவர் புவியியலைத் தன் சிறப்புப் பாட நெறியாக கற்று வந்தார். நாம் இருவரும் ஒரே விடுதியிலேயே தங்கியிருந்தோம்.

இன்னும் என் கண்முன் போஷேவின் அடக்கமான, அழகான, சாந்தமான, மென்மையான தோற்றம் தெரிகின்றது. நீண்ட கூந்தலும் விறுக்கு நடையும், கலகலப்பான சிரிப்பும், பேச்சும்தான் என்னைக் கவர்ந்தவை.

கருணை என்ற கொடை அவருக்கே உரியது. யாரும் துன்பமடைய விடமாட்டார். 1970 இல் நாம் பேராதனைப் பல்கலைக் கழக விடுதியில் இருந்த போது எனது அன்னைஆண்டவர் மடியில் சென்றுவிட்ட அந்த நெருப்பான செய்தி கிடைத்தது. அதை அறிந்த போஷா துடித்த துடிப்பு என்னை விட்டு அகலாது. என்னை ஓர் அன்புச் சகோதரியாக அரவணைத்து என்னுடன் சகல கருமங்களும் முடியும் வரை அருகிலிருந்த அன்புத் தோழி அவர்.

இந்த உறவு இன்று வரை தொடர்வது நான் செய்த அதிட்டம் எனலாம். தொடர்ந்து யா/மானிப்பாய் இந்துக் கல்லூரியில் இருவரும் கற்பித்த அந்த இனிய வருடங்களும் என்னை இன்னும் நெருட வைக்கின்றன.

1995 ஒக்டோபர் யாழ் மக்களை இடம் பெயர வைத்த காலம். எனது நண்பி என்னிடமே ஓடி வந்தாள். ஆறு மாதங்கள் எனது சொந்தக் குடும்பமாக வாழ்ந்த அந்த குதூகல நாட்களை மறக்க முடியுமா? துன்பத்திலும் இன்பம் கண்ட நாட்களென்றே கூறலாம்.

செல்வி கந்தசாமி ஆற்றல், அறிவு பண்பு மிக்கவர். கடமையில் கண்ணியமானவர். கடமையே தன் வாழ்க்கை எனச் செயற்பட்டவர். இதனாலன்றோ யா/பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியின் அதிபராகத் தன்னை அர்ப்பணித்தார். இடிந்து, அழிந்து, அவலமாகக் காட்சியளித்த-உருக்குலைந்த மகளிர் கல்லூரித்தாயை நிமிர்த்தி, கண்ணீர் துடைத்து மறுவாழ்வு கொடுத்த கருணை வடிவமாக நிற்கின்றார்.

எந்தவித ஆரவாரமுமின்றி, ஆசிரியர்களையும் தன் மாணவ மணிகளையும் அணைத்துத் தன்னாலியன்ற கற்றல்-கற்பித்தற் செயற்பாடுகளை பல சோகக் கட்டங்கள் ஊடாகச் செயற்படுத்திய ஒரு சிறந்த அதிபராக நான் கண்டேன் காண்கிறேன்.

அன்பின் பாத்திரமான இவர் சகல சௌபாக்கியங்களும் பெற்று இச் சமூகத்தின் விடிவிற்காக வாழ இறைவன் சுகம், பெலம் ஈயவேண்டுமெனப் பிரார்த்திப்பதுடன், நீண்ட ஆயுள் பெற்று வாழ வேண்டுமென வாழ்த்தி நிறைவு செய்கின்றேன்.

திருமதி. கிருபா பவசிங்கம்
ஆசிரியர்,
யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளுமை மிக்க அதிபர்

பண்டத்தரிப்பில் உள்ள பாடசாலை என்றால் அது மகளிர் பாடசாலை என்றே எல்லோரும் அறிவர். 1992இல் இருந்து இப்பாடசாலையின் அதிபராக செல்வி போஷேந்திரா கந்தசாமி அவர்கள் செயற்பட்டு வந்திருக்கிறார். பிள்ளைகளின் முன்னேற்றமே அவரது குறிக்கோளாக இருந்தது. பாடசாலை இடம்பெயர்ந்து சங்கானையில் இயங்கியபோது அதனை மீண்டும் பண்டத்தரிப்பில் இயங்குவதற்கு பெருமுயற்சி எடுத்தார். பாடசாலை வளவில் மிதிவெடிகள் இருக்குமோ என அச்சப்பட்ட வேளையில் துணிந்து முன்னே சென்றவர் அவர்.

பின்னர் பல விழாக்களை ஒழுங்குசெய்து பாடசாலை பண்டத்தரிப்பில் சுமுகமாக இயங்குவதை வெளி உலகிற்குத் தெரிவித்தார்.

நிர்வாகத்திறன் படைத்த அவர் பாடசாலையின் வளர்ச்சிக்காக அரிய பல காரியங்களைச் செய்தார்.

பொதுமக்களையும் பாடசாலையையும் இணைத்து பாடசாலை செயற்பாடுகளை முன்னெடுத்துச் சென்ற பெருமைக்குரியவர். தமது பிள்ளைகளின் கற்றல் செயற்பாடுகளை அறியவரும் பெற்றோரை இன்முகத்துடன் வரவேற்று அவர்களது குறை நிறைகளை கேட்பதுடன் உரிய தீர்வு வழங்குவதில் வல்லவர்.

கட்டடங்கள் அழிந்த நிலையில் தளபாடங்கள் இழந்த நிலையில் கல்லூரியை பொறுப்பேற்று தனது அயராத உழைப்பினால் மீண்டும் கல்லூரியை உருப்பெறச் செய்த பெருமை இவரையே சாரும்.

இத்தகு பண்பும் ஆற்றலும் நிறைந்த மணிவிழாக்காணும் அதிபர் செல்வி போஷேந்திராதேவி கந்தசாமி நீடிய ஆயுளுடன் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றேன்.

திரு. A.V துரையப்பா
சமாதான நீதவான்,
பாடசாலை நலன்விரும்பி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் கழகம்

"பண்புடையார் பட்டுண்டுலகு" என்ற வள்ளுவன் வாய்மொழிக்கு இலக்கணமாகத் திகழ்பவர் எங்கள் கல்லூரி அதிபர் செல்வி போ. கந்தசாமி அவர்கள். யா/பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி வரலாற்றில் ஒ மைல்கல் என்று சொல்லத்தக்க வகையில் சில அழியாத தடங்களைப் பதித்துள்ளார். கல்லூரியின் வரலாற்றில் கடமையாற்றிய அதிபர்கள் மத்தியில் தனக்கென ஒரு தனித்துவத்துடன் விளங்கியவர். அதிபராகக் கடமையேற்றது முதல் இன்றுவரை பலவேறு இன்னல்களுக்கு மத்தியிலும் மனத்துணிவுடனும் அர்ப்பணிப்புடனும் செயற்பட்டவர். எளிமை, நேர்மை, நியாயம், கண்டிப்பு, கண்ணியம் போன்ற உயர் விழுமியங்கள் நாம் அவரிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டியவை.

தமிழ் பேசும் நல்லுலகிற்கு கல்விமான்கள் பலரைத் தந்த கொக்குவில் பதியிலே கந்தசாமி பொன்னம்மா தம்பதிகளின் செல்வப்புதல்வியாக 1944ம் வருடம் தைத்திங்கள் 18ம் நாள் போஷேந்திராதேவி ஜனனமானார். இவர் தமது ஆரம்பக் கல்வி முதல் உயர் கல்வி வரை கொக்குவில் இந்துக் கல்லூரியில் பயின்றார். இக்கல்லூரியின் ஆசிரியராக விளங்கிய தந்தையின் கல்வி ஆற்றலும், ஆளுமை விருத்தியும் மகளை சிறந்த ஆற்றல் மிக்க மாணவியாக மிளிர வைத்தது. க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் அதிசிறந்த பெறுபேறுகளைப் பெற்று, 1966ம் ஆண்டு கொழும்புப் பல்கலைக் கழகத்தில் பட்டப்படிப்பை மேற்கொண்டார். பின்னர் புவியியலை சிறப்புப் பாடமாகக் கற்கும் பொருட்டு பேராதனைப் பல்கலைக் கழகத்தில் இணைந்து படிப்பைத் தொடர்ந்தார். இத்துறையில் சிறப்புத் தேர்ச்சியைப் பெற்றார்.

1976ம் வருடம் யூன் மாதம் 1ம் திகதி ஆசிரிய நியமனம் பெற்று நுவரெலியா அல்மின் ஹாஜ் முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் பணிபுரிந்தார். இங்கு ஆறு வருடங்கள் சிறந்த ஆசிரியையாகப் பணிபுரிந்தார். மீண்டும் சொந்த மண்ணாகிய யாழ்ப்பாணத்திலே கால்பதித்து, மாபெரும் மேதைகளை உருவாக்கிய மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு 1982ம் வருடம் இடமாற்றம் பெற்றார். இக்கல்லூரியில் தன்னை ஒரு அங்கத்தவராக இணைத்துக் கொண்டது முதல் சேவை மனப்பான்மை கொண்ட நன் மாணாக்கர்களை உருவாக்கும் பணியில் ஈடுபட்டு வந்தார்.

இவரது கற்பிக்கும் பாங்கு தனித்துவமானது. ஆசிரியர்களும் அக்காலத்தில் அதிபர்களாக இருந்தவர்களும் செல்வி போஷேந்திராதேவி அவர்களின் கற்பிக்கும் முறையை அடிக்கடி வியந்து கூறுவர். வகுப்பறைக்கேற்ற அளவிலும் தேவைக்கேற்பவும் தனது குரலை மட்டுப்படுத்தி இரத்தினச் சுருக்கமாக பாடங்களை விளக்குவார். சாதாரணதர வகுப்புகளுக்கு சமூகக்கல்வியும், உயர்தர வகுப்புகளுக்கு புவியியற் பாடத்தையும் போதித்தவர். எல்லா மாணவர்களையும் எளிதிலே ஈர்த்துவிடும் இயல்பு கொண்டவர். இவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது ஆசிரியர் குழாம்



இடமிருந்து வலமாக..
இருப்பவர்கள்
திருமதி வ. சிறிதரன்
திருமதி கி. புஸ்பகுமார்
திருமதி கோ. சிறீகரன்
திருமதி கி. சிவராஜா(உப அதிபர்)
செல்வி போ. கந்தசாமி(அதிபர்)
திருமதி இ. இராஜசேகரம்
திருமதி வா. நவரட்ணம்
திருமதி கா. இன்பநாதன்

நிற்பவர்கள் (முன்வரிசை)
திரு. யோ. பாஸ்கரன்
திரு. பொ. அமிர்தலிங்கம்
திரு. வே. சிவசக்திவேல்
திருமதி மா. ரவியேந்திரன்
திருமதி ம.. குணபாலன்
திருமதி சு. கந்தகுமார்
திருமதி க. பரமேஸ்வரன்
திரு. செ. அன்ரன் செல்வநாயகம்
திரு. அ. பாஸ்கரன்
திரு. தி. தீபன்

நிற்பவர்கள் (பின்வரிசை)
திருமதி கோ. சிவலிங்கம்
செல்வி சா. இராதாகிருஸ்ணன்
திருமதி கோ. சிவதாஸ்
திருமதி அ. ஈஸ்வரன்
திருமதி வெ. ந. ஜெ. ஜெயந்தன்
செல்வி பு. யோகராஜா (கல்வியியற்கல்லூரி உள்ளகப் பயிற்சி ஆசிரியர்)
செல்வி ஆ. மே. ட. கென்றி (கல்வியியற்கல்லூரி உள்ளகப் பயிற்சி ஆசிரியர்)
செல்வி த. யோகேஸ்வரன் (எழுதுவினைஞர்)

வருகைதராதோர்
திருமதி க. சண்முகநாதன் (பிரதி அதிபர்), திருமதி இ. யோகநாதன், திருமதி சு. கருணாகரன்,
திருமதி நெ. ரவீந்திரன், திருமதி த. அருள்ரமேஷ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"பருகுவனன்ன ஆர்வத்த ராகிச்*
*சித்திரப் பாவையினத்தக வடங்கிச்*
*செவி வாயாக நெஞ்சு களனாக*
*கேட்டவை கேட்டவை விடாதுளத் தமைத்து"*

என்பதற்கிணங்க மாணவர் கற்கும் வகையில் இவர் கற்பிக்கும் அழகே தனியழகு.

பழகுவதற்கு இனிமையான எமது அதிபர் மாணவர்கள் தம் கடமைகளைத் தட்டிக்கழிக்கும் நேரங்களில் மிகவும் கண்டிப்புடன் நடந்து கொள்வார். அவர்களது தவறை உணர்ந்து திருந்தும் வகையில் புத்திமதிகள் கூறி வழிநடத்துவார். இயற்கையிலே இரக்க குணம் நிறைந்த இவர் வறுமையுற்ற வலிமை குறைந்த மாணவர் சமூகத்தின்மீது தனது அன்பைச் சொரிவதில் பின்னிற்க மாட்டார்.

தனது அறிவை மெருகூட்டும் ஆவல் நிறையவே இருந்ததனால், நாவல நுகெகொட திறந்த பல்கலைக் கழகத்திலே பட்டப்பின்கல்வி டிப்போளாமாவை 1990ம் ஆண்டு நிறைவு செய்து தொழிற் தகமையைப் பெற்றுக் கொண்டார். அத்துடன் அதிபர் நியமனங்களுக்கான தெரிவுப் போட்டிப் பரீட்சையில் சித்தி எய்தினார். பலபோட்டிகளின் மத்தியில் உயர் புள்ளிகளைப் பெற்று (SLPS Grade I) தரம் 1 அதிபராக எமது கல்லூரியில் 09.09.92ல் நியமனம் பெற்றார்.

இவர் அதிபராக கடமையேற்ற காலப்பகுதியில் இலங்கை இராணுவத்தினரின் முற்றுகையினால் பாடசாலை வட்டு இந்துக் கல்லூரிக்கு இடம் பெயர்ந்திருந்தது. அவ்வேளையில் தளரா உறுதியும் மனத்துணிவும் கொண்டு தனது பணியைப் பொறுப்பேற்று செவ்வனே நிறைவேற்றினார். அக்காலத்தில் 1300 இற்கு மேற்பட்ட மாணவர்களும் 50இற்கு மேற்பட்ட ஆசிரியர்களும் கடமையாற்றினர். கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் தொடர்வதற்கு பெரும் சிரமம் ஏற்பட்டது. அதிபரின் ஊக்கத்தினாலும் விடாமுயற்சியினாலும் வட்டு இந்துக் கல்லூரியிலிருந்து தனியாக இயங்குவதற்காக வைத்தியர் பகீரதன் வீட்டிற்கு இடமாற்றம் செய்யப்பட்டது. அதிபரின் முயற்சியினால் பல கொட்டகைகள் அமைக்கப்பட்டு வகுப்புக்கள் நடைபெற்றன.

மீண்டும் இராணுவ நடவடிக்கைகள் விஸ்தரிக்கப்பட பாடசாலையானது மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கும் தொடர்ந்து தென்மராட்சிக்கும் இடம்பெயர்ந்தது. இக்காலங்களில் இவர் மிகுந்த மனத்துணிவுடன் எதிர்த்து நின்று சேவையாற்றியமை இங்கு குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத்திற்கு திரும்ப வந்ததும் மிதிவெடிகள், கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளதென கருதப்பட்ட பண்டத்தரிப்பு பாடசாலை வளவினுள் 1996ம் ஆண்டின் பிற்பகுதியில் கல்லூரி இயங்க ஆரம்பித்தது. இதற்கு பண்டத்தரிப்பில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாதான நீதவானாக இருந்த துரையப்பா அவர்களும் அதிபருடன் சேர்ந்து நலன்விரும்பியாக செயற்பட்டார். அதிபரின் அர்ப்பணிப்பினாலும் விடா முயற்சியாலும் அழிவடைந்த கட்டடங்கள் மீளவும் புதுப்பொலிவு பெற்றன. ஆரம்பபிரிவு கட்டடங்கள் புதிய கல்விச் சீர்திருத்தத்திற்கமைய புனரமைக்கப்பட்டன. G.T.Z. போன்ற உதவி நிறுவனங்களின் உதவிகள் பெறப்பட்டன. மாணவர்களுக்கு இலவச வைத்திய சிகிச்சைகள் மேற்கொற்றப்பட்டன. இவரது அயராத முயற்சியால் பாடசாலைச் சுற்றுமதில் அமைக்கப்பட்டது. இவரது தன்னலம் கருதாத சேவையும் நிதானத்துடன் திட்டமிட்டு பணியாற்றும் பண்பும் நேரந்தவறாமையும் குறிப்பிடத்தக்கன.

"The history of the world is but the biograph of great men"
என்ற ஆங்கிலப் பழமொழிக்கு உதாரணமாகவே அதிபர் செல்வி போஷேந்திராதேவி கந்தசாமி விளங்கினார்.

எந்நேரமும் பாடசாலையின் நலனுக்காகவே அரும்பாடுபட்டவர். பாடசாலையில் நடைபெறும் சகல விழாக்களையும் தனது வீட்டு நிகழ்வு போல முன்னின்று ஒழுங்கமைப்பார். கல்லூரியின் செயற்பாடுகள் யாவும் திட்டமிட்டபடி நடைபெற வேண்டும் என்பதில் மிகவும் கண்டிப்புடன் செயற்பட்டவர். தனது சொந்த பணத்தைக் கூட பல சந்தர்ப்பங்களில் பாடசாலைக்கெனப் பயன்படுத்தி இருப்பதை யாவரும் அறிவர்.

"Give and spend, God bill sent"
இந்த பழமொழியை நன்கு தெரிந்தவராக இருந்தமையால் இவரது செயற்பாடுகள் இவ்வாறு அமைந்தது.

ஆசிரியர்கள் அனைவரையும் தனது வழிநடத்தலின் கீழ் சுதந்திரமாகவும் சிறப்பாகவும் கடமையாற்ற வழியமைத்தார். எந்தவிதமான பிரச்சினைகள் வந்தாலும் அதனை தானே எதிர்கொண்டு ஆசிரியர்களை மதித்து அன்பாகவும் பண்பாகவும் நடத்தியவர் எங்கள் அதிபர் என்பது நாம் பெருமிதத்துடன் கூறவேண்டிய விடயமாகும். தானே பிறருக்கு ஒரு வழிகாட்டியாக செயற்பட்டு வாழ்ந்து காட்டியவர்.

ஆசிரியப்பணியில் ஈடுபட்டிருந்த 29 வருடங்களில் 12 வருடங்கள் எமது பாடசாலையில் அதிபராக சேவையாற்றியுள்ளார். இவரது சேவை எமது கல்லூரிக்கே கூடுதலாக கிடைத்திருந்தமை கல்லூரியின் பெரும் பேறாகும்.

இவரது ஓய்வு எமக்கு ஈடு செய்ய முடியாத இழப்பு எனினும் அவர் தனது சேவையை பாடசாலை நலனுக்கென வழங்குவார் என நம்புகிறோம். அவரது சேவைகளை நன்றியுடன் நினைவு கூர்வதுடன், அதிபர் அவர்கள் சுகதேகியாக நீண்ட ஆயுளுடன் தனது ஓய்வுக் காலத்தைச் சிறப்பாக கழிக்க வேண்டுமென இறைவனை வேண்டி நிற்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் அதிபர்

பண்டத்தரிப்பினில் இலங்கும் மகளிர் கல்லூரியின்
பண்புமிகு அதிபராய் விளங்கும் எம் அதிபரே
பெண்களுக்கோர் சிறந்த பாதுகாவலரே எம்
கண் போன்றவரே உமை வாழ்த்துகின்றோம்

கல்வியே கருந்தனம் என்று எண்ணி
செல்வியே உன் வாழ்வை அர்ப்பணித்தாய்
நல்குவாய் உன் ஆசி எம் மாணவர்க்கு
செல்குவாய் நீ நலன் மிகப் பெற்று

கலைகளை ஆய்ந்து கற்ற உன் திறமையால் உயர்
நிலையினை நீ அடைந்து வாழ்ந்திட்டாய்
சிலையென நாம் காணும் கல்விக்கோர் தெய்வம்
கலைவாணியே உனைக் காத்திட வேண்டுகின்றோம்

காலடி வைக்க யாரும் துணியாத வேளையில் நீ
சீரடி வைத்து இங்கு துணிவுடன் சாதனை படைத்தாய்
நேசனடி வணங்கியே வேலை தொடங்கினாய்
நாலடி சேவித்தே பூஜைகள் பல செய்வித்தாய்

சீரழிந்த கட்டிடங்கள் புனரமைத்து உந்தன்
பேரது தான் நிலைக்க நலன் பல புரிந்தாய்
பாரதி காட்டிய புதுமைப் பெண்ணாய் நீ
நேரிய பார்வையில் சகலதும் சாதித்தாய்

மாணவச் செல்வங்களுக்காய் அயராது உழைத்தாய் நீ
காணவே வியந்தோம் உன் சீரிய செயல்கள் யாவும்
நாணமே அணிகலன் ஆயினும் எம் நங்கையர்
பேணவே வேண்டும் நீ வளர்த்த கல்லூரியை

காலங்கள் தோறும் நலமுடன் வாழ வாழ்த்துகின்றோம்
சீலமும் சிறப்பும் கொண்டு நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்
ஞாலத்தில் உன் புகழ் எங்கும் பரவ வாழ்த்துகின்றோம்
வேலவன் கருணை உன் மீது பொழிந்திட வேண்டுகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யா/பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரும்பணியாற்றி அதிபர்

"தோன்றிற் புகழோடு தோன்றுக அஃதிலார்
தோன்றில் தோன்றாமை நன்று"

என்ற வாக்கிற்கு இலக்கணமாகத் திகழ்பவர் எங்கள் கல்லூரி அதிபர். 1992ம் ஆண்டின் பிற்பகுதியில் கல்லூரியின் அதிபராக பதவியேற்று தனது ஓய்வுக்காலம் வரை அர்ப்பணிப்புடன் சேவையாற்றியவர். இடம் பெயர்ந்து வட்டு இந்துக் கல்லூரியில் இயங்கிய எமது கல்லூரியை மனத் துணிவுடன் பொறுப்பேற்று, பல்வேறு இன்னல்களுக்கும் முகம் கொடுத்து மீண்டும் பழைய இடத்திலேயே இயங்கச் செய்தவர். பழைய மாணவர் சங்கத்தை மீண்டும் கட்டியெழுப்ப பல்வேறு வழிகளிலும் முன்னின்று உழைத்தவர். கல்லூரி புத்துயிர் பெற்று சகல துறைகளிலும் முன்னேற சகலரையும் ஒன்றிணைத்து செயற்பட்டவர். எங்கள் அன்புக்குரிய அதிபர் தமது ஓய்வுக் காலத்தில் வளமும் நலமும் பெற்று நீடூழி காலம் வாழ வாழ்த்துகிறோம்.

பழைய மாணவர் சங்கம்,
யா/பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் அதிபர்

இலங்கையின் சிகரம் என விளங்கும் யாழ் நகரிலே பண்டத்தரிப்பு நகரின் மத்தியில் தாரகை போல் விளங்கும் பண் மகளிர் கல்லூரியின் ஈராறு ஆண்டுகள் அதிபராக சேவையாற்றி ஓய்வு பெற்றுக் கொள்ளும் எங்கள் அதிபர் செல்வி போஷேந்திராதேவி கந்தசாமி அவர்கள் மாணவர் மனதில் என்றும் நீங்காத இடம் பிடித்த உத்தமராய் விளங்கினார். கடமை கண்ணியம் கட்டுப்பாடு என்பவற்றையே தமது கொள்கையாகக் கொண்டு அன்பாகவும் அக்கறையாகவும் மாணவர்களை வழிநடத்தியவர். இவரது கண்டிப்பான வழிநடத்தலில் நாம் இன்று ஒழுக்கமுற்ற மாணவர்களாய் சமூகத்தின் மத்தியில் திகழ்வதில் பெருமையடைகிறோம்.

எதற்கும் அஞ்சாத நெஞ்சம் கொண்ட அதிபர் இவர் போர்ச் சூழலினால் நலிவடைந்து இருந்த எமது பாடசாலையை இயங்கச் செய்த பெருமை அவரையே சாரும்.

இன்று எமது பாடசாலை மாணவர்கள் விளையாட்டிலும் கல்வியிலும் தேசிய ரீதியில் பங்குபற்றுவதற்கு உற்சாகமான ஆலோசனைகளையும் வழி நடத்தல்களையும் வழங்கிய பெருமை இவருக்கு உண்டு. எமது பாடசாலை அபிவிருத்திக்காக சகல வழிகளிலும் அயராது உழைத்தார்.

இவருடைய நிர்வாகம் இடம்பெற்ற காலப்பகுதியில் ஆசிரியர் போதாமை காணப்பட்ட போது எமக்கு ஆசிரியராகவும் அதிபராகவும் கடமையாற்றி கல்வியோடு பல அறிவுரைகளை வழங்கியவர். இவ்வாறு எமது பாடசாலையின் அபிவிருத்திக்காகவும் புனரமைப்புக்காகவும் கல்வி வளர்ச்சிக்காகவும் தமது மகத்தான சேவையை வழங்கிய எமது அதிபரின் வாழ்க்கை வளம்பெற மனதார வாழ்த்தி நிற்கின்றோம்.

**க.பொ.த. உயர்தர மாணவர் மன்றம்**
யா/பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழாக்காணும் எம் அதிபரை வாழ்த்தி...

பண்டத்தரிப்பின் திருநாமம் விளங்கும்
பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலையில்
வந்த நல் அதிபர்கள் வரிசையில் - சிந்தை மகிழ்
நல்லதிபர் போகேஷந்திராதேவி - கந்தசாமி ஓர் நல்முத்து

கொக்குவில் பதிதோன்றி உத்தம நற்பண்பொழுக
கருகியே நடந்து கொக்குவில் இந்துவில் கல்வித்தனை
விரும்பியே கற்றீர் விளைந்ததுவே நல்லறிவு
உயர் கல்விதனை கற்று உயர்ந்தீர் பேராதனையிலே

உயர் இலட்சியத்தில் புவியியலை சிறப்பாக்கி
உயர் பட்டமும் பெற்றீர்
ஆசிரியர் சேவையிலே அருந்தமிழ் புவியியலும்
நேசமொடு மாணவர்க்கு நிறைவு பெற அளித்தீர்

கல்லூரி கவின்பெற கருந்தவம் ஆற்றியே
எல்லோர் மனதிலும் எழிலோடு நிற்கின்றீர்
பண்டத்தரிப்பிலே ஓர் பாடசாலை என்றால் அது
பண் மகளிர் என்றால் மிகையில்லை

இடம்பெயர்ந்து பாடசாலை
இன்னலுற்ற போது கலங்கரை விளக்கமானீர்
பின்னாளில் கட்டிடங்கள் சிதைந்து போயும்
தளபாடம் களவு போயும் நின்ற வேளை

உள்ளமது தளராது உறுதியுடன் பணி தொடர்ந்தீர்
சொந்தப் பணத்தை இறைத்து சொகுசு வாழ்க்கை விட்டு
பண்மகளை வளர்க்க அரும்பாடுபட்டீர்
மாணவரின் இரு கண்கள் கல்வியும் ஒழுக்கமும் என்றீர்

வெறும் வாய்ச்சொல்லில் இல்லாது
வாழ்க்கையிலும் காட்டி வைத்தீர்
கடமை கண்ணியம் கட்டுப்பாடு இம் மூன்றும்
திடமாய் கொண்டவரே திருவுடன் வாழ்கின்றீர்


இருபத்தேழு ஆண்டுகள் முழுமை பெறச் சேவை தனை
கண்ணாய் ஆற்றினீர் கடமையே உம் சாதனை
தன்னலம் இல்லா தண்ணளி மனத்தொடு
அன்னையாய் நின்று அரும்பணி ஆற்றினீர்

வாழ்க சீர் சிறப்பமைய வளமொடு பல்லாண்டு
வாழ்க நம் அதிபர் வாழ்க வாழ்க

**திரு. பொ. அமிர்தலிங்கம்**
ஆசிரியர்,
யா/பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எமது அதிபர் பேராதனை பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்று வெளியேறிய போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமயம் காட்டும் வாழ்க்கை நெறி

சமயம் என்கிற சொற்பதமானது வணக்க தெய்வத்தையும் வழிபாட்டு முறைகளையும் உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது. வழிபாட்டு முறைகளினூடாக ஒரு மனிதனை சரியான பாதையில் வாழ வழிகாட்டியாகவும் அமைகின்றது. எப்படியும் வாழலாம் என்றில்லாமல் இப்படித்தான் வாழவேண்டும் என்பதனை இதிகாச புராணங்களினூடாகத் தெளிய வைக்கின்றது. இயற்கைக்கு அப்பாற்பட்டு விளங்கும் ஒரு பேருண்மையில் நம்பிக்கை கொள்வது சமயம் எனக் கொண்டால் இந்த நம்பிக்கை காரணமாக எழும் உணர்வானது மனிதனை அந்தப் பேருண்மையினை நாடிக் குறிப்பிட்ட சில செயல்களைச் செய்யும்படி தூண்டுகின்றது. அறத்தின்வழி வாழவேண்டும். அவ்வவ் வர்ணத்தவருக்குரிய ஒழுக்கத்தைப் பேணவேண்டுமென சமயம் வலியுறுத்துகின்றது. ஒவ்வொரு மனிதனதும் கடமைகளை "சமஸ்காரம்" என்கின்ற பகுதியில் கூறப்படுகின்றன. கடமைகளைச் செய்யாது விடுபவன் தண்டனைக்குள்ளாவான் என தர்ம நூல்கள் எடுத்துக் கூறுகின்றன. "கடமையைச் செய் பலனை எதிர்பாராதே" என பகவான் கிருஷ்ணன் போர்க்களத்திலே அருச்சுனனுக்கு உபதேசிக்கின்றார். இங்கு ஒருவனது கடமை பெரிதென வலியுறுத்தப்படுவதைக் காணலாம். கடமை செய்வதற்குத்தான் உரிமையுண்டு பலனை எதிர்பார்க்க எமக்கு உரிமையில்லை. எனவே ஒருவன் கடமை வழுவாது வாழ வேண்டும் என்பதனை வலியுறுத்துவதாக அமைகின்றது. மக்கட்குச் செய்யும் கடமைகள் இறைவனால் ஆணையிடப்பட்டவை எனக் கொண்டால் சமய நெறியும் அறநெறியும் இன்றுவரை ஒரே கடமைகளையே தம்முள் கொண்டுள்ளன. "தன்னுயிர்போல் மன்னுயிரையும் காத்தல் வேண்டும்" என்பதை வலியுறுத்துகின்றது. பிற உயிர்களிடத்து அன்பு, இரக்கம், தயை, ஜீவகாருண்யம், அகிம்சை, ஆன்ம நேயம் என்கின்ற நற்பண்புகளை வளர்த்து குரோதமில்லா ஒரு சமூக வாழ்வை கட்டியெழுப்ப வேண்டுமென சமயம் வழிகாட்டுகின்றது. நல்ல ஒழுக்கப் பண்புகளை சமூகத்தில் வளர்ப்பதனை அடிப்படையாகக் கொண்டது சமய நெறியாகும். திருமந்திரத்திலே வருகின்ற இவ்வடி மூலம் உயிரினங்கள் அனைத்திலும் அன்பு பூணும் தன்மையைக் கண்டு கொள்ளலாம். "உண்ணும் போதொரு கைப்பிடி" "பசுவிற்கொருவாயுறை." அன்பே சிவமாதலால் சைவம் அன்பு மதம் எனவும் திருமந்திரம் வகுத்துக் காட்டியுள்ளது. "அன்பும் சிவமும் இரண்டெனபர் அறிவிலர் அன்பே சிவமாவது ஆரும் அறிகிலர்" எனச் சகல உயிர்களிலும் ஜீவகாருண்யத்தை வெளிப்படுத்துகின்றார். சிவனை "அன்பில் விளைந்த ஆரமுதே" என மணிவாசகர் பாடுகின்றார்.

வேதகால ரிதக்கொள்கையிலே ஒழுக்கத்திற்கு முதன்மை கொடுக்கப்படுகின்றது. ரிதசயகோபன் ஒழுங்கை கண்காணிப்பவனாக இருக்கு வேதம் கூறுகின்றது. எவன் ஒருவனும் தன் ஒழுக்க நியமங்களில் இருந்து தவறுகின்றானோ அவன் தண்டிக்கப்படுவான் என்பது வேதவாக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமி விவேகானந்தர் கூற்று வருமாறு "கடவுளிடம் நம்பிக்கையற்றவனை நாத்திகன் எனப் பழைய மதம் கூறும். தன்னம்பிக்கையற்றவன் நாத்திகன் என புதிய மதங்கள் கூறும். சொற்களை விதம் விதமாக உச்சரிப்பது - நூல்களை விதம் விதமாக விளக்குவது இவையெல்லாம் அறிவாளிகளின் இன்பத்திற்கே உதவும் ஆத்ம விடுதலைக்கு உதவாது" என்று தன்னம்பிக்கையின் அவசியத்தை சுவாமி விவேகானந்தர் கூறிச் சென்றுள்ளார்.

திருவருளுக்கு ஒப்பானதும் மேலானதுமான பொருள் ஒன்றுமில்லை. உலகத்தில் உள்ள ஆன்மாக்களை தம்மை அறிவதற்கும் உலகத்தை அறிவதற்கும் இந்தத் திருவருளே காரணமாக இருக்கின்றது. இது ஆணவத்தின் வலிமையைக் குறைத்து ஆன்மாவின் ஞான சக்தியாகிய ஒளியை மேலாக விளக்குவதற்காக எல்லா ஆன்மாக்களிடத்தும் நிற்கும்.

**"தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தருஞ்சக்தி**
**பின்ன மிலானெங்கள் பிரான்"** திருவருளே உலகத்திலுள்ள உயிர்கள் யாவற்றையும் தோற்றுவிக்கின்றது. முடிவில் ஆணவ மலத்தோடு எல்லா மலங்களையும் ஒருங்கே ஒதுக்கி அருள்கின்றது.

ஆன்மாக்கள் இந்த திருவருளை அறியாமல் இருக்கின்றன. பாற்கடலில் உள்ள மீன்கள் எப்போதும் பாலையே காணுகின்றன. அதுபோல ஆன்மாக்கள் இடையறாமல் அருளிலே வசித்தலால் திருவருளை உணராமல் இருக்கின்றன. பாற்கடலில் வசிக்கின்ற மீன்கள் பாலை விரும்பாமல் இழிவான பொருட்களைத் தேடி உண்கின்றன. அதுபோல ஆன்மாக்களும் உலக இன்பங்களைப் பொருளாக எண்ணி திருவருளின் செய்கையை அறியாமல் இருக்கிறார்கள்.

"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்" எனச் சைவத்தைப் பரப்பி நின்ற சிவனடியார்கள் பணியே இந்துசமய வாழ்வியலுக்கு வழிகாட்டியாகவும் அமைந்ததோடு "மண்ணில் நல்ல வண்ணம் வாழவும்" வழிகாட்டியது.

பிரபஞ்சத்திலே பல சமயங்கள் காணப்பட்ட போதும் சமயம் என்ற சிறப்பையும் பெருமையையும் பெற்றுக் கொள்வது சைவசமயமாகும். இந்து மதத்தின் சிறந்த பண்பாட்டம்சங்களை புராண இதிகாசங்கள் எடுத்தியம்புகின்றன. மாதா பிதா குருவைத் தெய்வமாக மதித்தல் சகோதரத்துவபாசம், அன்பு, கருணை பெரியோரைக் கனம் பண்ணுதல் சிவனடியாரைப் போற்றுதல் விட்டுக்கொடுக்கும் தன்மை போன்ற நற்பண்புகளும், இல்வாழ்க்கை, விருந்தோம்பல் ஒழுக்கக் கட்டுப்பாடுகள் சமத்துவம், சிறந்த நட்பு போன்ற அம்சங்களும் எடுத்துக்காட்டுகின்றன.

சமயாசாரங்கள் நம்பிக்கையின் அடிப்படையில் பின்பற்றப்பட்டாலும் கூட அவை விஞ்ஞான ரீதியாக ஆராயும் போது வாழ்க்கைக்கு அவசியமானவையாகவே காணப்படுகின்றன. வீடுகளைக் கூட்டிப் பெருக்கி சாணநீர், மஞ்சள் நீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிப்பதால் கிருமித்தொற்று ஏற்படாமலும் விஷ ஜந்துக்கள் வராமலும் தடுக்கப்படுகின்றன. விரதமிருப்பதால் தேகசுத்தி, நோயின்மை, நீண்ட வாழ்வு, மனத்தூய்மை, மனவடக்கம் மனமகிழ்ச்சி என்பன ஏற்படுகின்றன. ஆலய தரிசனத்தால் மனவமைதி, மனவொருமை, சமத்துவம், சகோதரத்துவம் சமூக ஒற்றுமை, சமூகப்பற்று போன்ற நற்பண்புகள் ஏற்படுகின்றன்

வாழ்வின் மிக உயர்ந்த குறிக்கோள் துன்பங்களில் இருந்து விடுபடுதலே எனலாம். அதுவே விடுதலை ஆகும். "அயரா அன்பில் அரன்கழல் செலுமே" என சிவஞானபோதம் கூறுகின்றது.

"மனிதனை மனிதனாக்கும் மதம், மனிதனை மனிதனாக்கும் கல்வி, மனிதனை மனிதனாக்கும் தத்துவங்கள் எல்லாவகையிலும் மனிதனை மனிதனாக்கும் ஆன்மீகம் இவை இன்றைய இன்றியமையாத தேவைகள்" என விவேகானந்தர் கூறுகின்றார்.

எனவே இந்த வகையில் நோக்கிப் பார்க்கின்றபொழுது ஒரு மனிதனால் செம்மையாக வாழ்வதற்கு வழிகாட்டியாக அமைவது சமயம் என்பதை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெட்டத் தெளிவாக காணமுடிகின்றது.

**தி. தீபன்**
ஆசிரியர்,
யா/பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் கணினியைச் சிறப்பாகக் கையாள....

## - உதவிக் குறிப்புகள்





நீங்கள் கணினிகளைப் பயன்படுத்தும்போது அவை தொடர்ந்தும் சிறப்பாகச் செயலாற்றுவதற்குச் சரியான பராமரிப்பு அவசியம்.

முன்னெச்சரிக்கையும் அவதானமும் இருப்பின், கணினிகள் உச்ச செயற்திறனுடன் நீண்ட நாட்களுக்கு இயங்கும்.

உங்கள் கணினிகளின் செயற்திறனைப் பராமரிக்கச் சில இலகு வழிகள்-

* Start up Disk ஐ உருவாக்கிக் கொள்ளுங்கள். அதற்குப் பயன்படுத்தும் Floppy Disk ஐ பாதுகாப்பாக வைத்துக்கொள்ளுங்கள்.

* கணினி Hard Disk இலிருந்து Boot ஆக மறுக்கும் வேளைகளில் இந்த Start up Disk கைகொடுக்கும்.

* Start up இலிருக்கும் தேவையற்ற Programகளை நீக்கிவிடுங்கள். இல்லை எனில் ஒவ்வொரு தடவை கணினி Boot ஆகும் போதும் அந்த Programகள் இயங்கி, கணினியின் ஆரம்பமாகும் வேகத்தைப் பாதிக்கும்.

* கணினியை தூசு இல்லாத இடத்தில் வையுங்கள். தூசுதான் கணினியின் மிகமுக்கிய எதிரி. கணினியினுள் காணப்படும் சிறிய Cooling fan கள் காற்றுச் சுற்றோட்டத்தை உருவாக்கும்போது தூசுத் துணிக்கைகள் உள் நுழைந்துவிடக்கூடும். இயலுமாயின் அவ்வப்போது சுத்திகரித்துக்கொள் வதும் நல்லது.

* Mother Board Chipset, Video Card, Sound Card, Printer போன்ற இணைப்புக் கருவிகளுக்கான Device Driver களின் அண்மைய பதிப்புக்களைப் (Latest verson) பயன்படுத்துங்கள். கணினியின் சிறப்பான செயற் பாடுகளுக்கு இது வழி வகுக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* ஒழுங்கின்றிய மின் இணைப்புக்களால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களைத் தவிர்ப்பதற்கு UPS (Uninterrupted power supply) ஐ பயன்படுத்துங்கள்.


* மிக முக்கியமான File களை Floppy, CD போன்றவற்றில் Backup எடுத்து வைத்துக்கொள்ள வேண்டும்.

* Operating system மற்றும் ஒரு சில Application களுக்கென அவ்வப்போது வரும் Service Pack File களைக்கொண்டு Update செய்துகொள்ளுங்கள்.

* தேவையில்லாத Temporary file களை அவ்வப்போது சோதித்து, தேவையில்லாதவற்றை delete செய்துவிடவேண்டும்.

* கட்டாயமாக Anti Virus புரோகிராம் ஒன்றை Instal செய்துகொள்ளுங்கள். இணைய வசதி உள்ளவர்கள் தினமும் Update செய்துகொள்வது நல்லது.

## கணினி தகவல் சேமிப்பதில் 'சி.டி' க்களின் முக்கியத்துவம்!





1980களில் புறசேமிப்புச் சாதனமாகிய 5.25 அங்குல புளோப்பி டிஸ்குகள் பயன்படுத்தப்பட்டு வந்தன.

இவற்றில் 360KB அளவுக்கு மட்டுமே தகவல்களைச் சேமிக்க முடியும். பின்பு இந்த புளோப்பி Disk இன் மெமரியின் அளவு போதாத காரணத்தினால் 1982க்கு பின்பு தற்போது தொடர்ந்து வெற்றிகரமாகப் பயன்பாட்டில் இருந்து வரும் 3.5 அங்குல புளோப்பி டிஸ்குகளைக் கண்டு பிடித்தனர்.

இவற்றில் 1.44MB அளவு தகவல்கைள மட்டுமே சேமிக்க முடியும். Software தயாரிப்பாளர்களுக்கு இந்த மெமரி அளவு போதவில்லை. காரணம் பல புளோப்பி டிஸ்குகளில் Software ஐ சேமிக்க வேண்டிய கட்டாயம் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவரும் அதிக மெமரி உள்ள ஒரு தனி சாதனத்தை எதிர்நோக்கி இருந்த நேரத்தில் SONY நிறுவனம் முதல் CD-ROM ஐ 1987 ஆம் ஆண்டு உருவாக்கியது.

## CD-ROM என்றால் என்ன?




CD-ROm என்பது Optical data storage device ஆகும்.

இவற்றில் 650MB கொள்ளளவு கொண்ட Dataவை சேமித்து வைக்க முடியும்.



ஆனால், இருக்கின்ற Dataவைப் பிடிக்க மட்டுமே முடியும். (Read only memory) அதில் எந்த மாற்றங்களும் செய்ய முடியாது என்பது Compact Disk களின் மிகப்பெரிய குறையாகஇருந்தது.

**நன்றி: நிலவு . com**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தை வென்ற கவிஞன் பாரதி

காலத்திற்குக் காலம் மகான்களும், ஞானிகளும், கவிஞர்களும் சித்தர்களும் தோன்றி தங்கள் ஆற்றலினாலும் ஆளுமையினாலும் மக்கள் மனதைக் கவர்ந்துள்ளார்கள். இவர்கள் மத்தியில் காலச் சுழற்சியில் அடிபடாது நிலைத்து நிற்கும் பழம் பெரும் தமிழறிஞர்களில் காலத்தையே வென்று கவிபடைக்கும் ஆற்றல் வாய்ந்து காணப்படுபவன் மகாகவி சுப்பிரமணிய பாரதியார்.

சொல்லாலும் செயலாலும் தமிழ்ச் சமூகத்தை மாத்திரமல்லாமல், இந்திய தேசத்தை மாத்திரமல்லாமல் உலகத்தையே ஆட்டிப் படைத்தவன். அவனுடைய கவிதைகள் மக்களின் சிந்தனையைத் தூண்டியதுமல்லாமல் ஒவ்வொரு தனிமனித சுதந்திர வேட்கைக்கும் அடிநாதமாய் விளங்கின

பாரதியின் கவிதைகள் உறங்கிக் கொண்டிருந்த சமுதாயத்தை தட்டி எழுப்புவனவாய் அமைந்தன. கலைநயமும் சொன்னயமும் கொண்ட அவனது கவிதைகளை கற்றோரும் மற்றோரும் கைதொழுது போற்றினர். கவிஞர் வாழ்ந்த காலத்தில் போற்றப்படாத அவனுடைய இலக்கியங்கள் இன்று இலக்கியச் செழுமை பெற்று மக்கள் மனதில் உலாவருகின்றன எனின் மிகையாகாது. சமுதாய விழிப்புணர்வுவையும் தமிழிலக்கியத்தில் ஒப்பற்ற மலர்ச்சியையும் தோற்றுவித்தவன் பாரதி.

பாரதியின் கவிதைகளில் பாடாத பொருளே இல்லை எனலாம். தமிழ் கூறும் நல்லுலகில் பாமர மக்களும் விளங்கிக் கொள்ள வேண்டும் என கவிதை யாத்தவன் பாரதி. புதுமைக் கவிதைகளால் அனைவராலும் கவரப்பட்ட பாரதி சமுதாயம் பற்றிய பரந்த சிந்தனையும் நுணகி நோக்கும் ஆற்றலையும் கொண்டு எவர்க்கும் அஞ்சாத கவிதைகளைப் படைத்தான். சவால்கள் நிறைந்த சமுதாயப் பின்னனியில் நின்று கொண்டு கவிதைகளை யாத்தவன் மகாகவி.

**சுவை புதிது பொருள் புதிது வளம் புதிது**
**சொற் புதிது சோதி மிக்க**

**நவகவிதை**..................... செய்தவன் பாரதி. கவிதைகளில் இடம்பெற்ற ஓசை நயம், கவிதை நடை, சொல்லாட்சி என்பன மக்கள் மனதை ஈர்த்தவை. தமிழ் கூறும் நல்லுலகம் எங்கும் மூலை முடுக்குகள் தோறும் கவிதைகள் பரவக் காரணமாயிருந்தவை அவனுடைய பாடல்களின் அமைப்புக்களே.

அந்நியராட்சிக் காலத்தில் தம் பெருமை அறியாமல் இருந்த சமுதாயத்தை தமது பாக்களால் தட்டியெழுப்பியவன் பாரதி. அடிமைப்பட்டு ஆங்கில ஆதிக்க வசப்பட்டு இருந்த மக்களை நடிப்புச் சுதேசிகள் என்று எள்ளிநகையாடியவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அச்சமும் பேடிமையும்
அடிமைச் சிறுமதியும்
உச்சத்திற் கொண்டாரடி கிளியே
ஊமைச் சனங்களடி"

என இந்திய மக்களை இழித்துரைக்கும் பாடல்கள் மூலம் அக்கால மக்களின் சிந்தனையைத் தூண்டி சுதந்திர சமூகத்தை தோற்றுவிக்க விரும்பிய பாரதி கவிதைகளைச் சிறந்ததொரு சாதனமாகக் கொண்டான். சுதந்திர உணர்வு மேலோங்கிக் காணப்பட்டமையால்தான் சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட மகாத்மாகாந்தியை

"பாரத தேசந்தன்னை வாழ்விக்கவந்த
மகாத்மா நீ வாழ்க ..................." என வாழ்த்தினான் பாரதி.

பாரதியார் பாடுபொருளாகக் கொண்டவை எண்ணிலடங்கா. இயற்கையை ரசித்த பாரதி அவற்றின் அழகில் மயங்கி அற்புதக் கவிதைகளைச் செய்திருக்கின்றான். பாரதி நிலாவின் அழகை ரசித்துப் பாடிய பாடல்கள் அற்புதமானவை. அவன் கையாளும் அணிகள் யாவும் நயந்து நயந்து ரசிக்கத்தக்கவை.

எல்லையில்லாததோர் வானக்கடலிடை
வெண்ணிலாவே! விழிக்
கின்பமளிப்பாதோர் தீவென்றிலங்குவை
வெண்ணிலாவே

என்றும்

மெல்லிய மேகத்திரைக்குள் மறைந்திருக்கும்
வெண்ணிலாவே! உன்றன்
மேனியழகு மிகைப்படக் காணுது
வெண்ணிலாவே

என்றும் நிலாவின் அழகைக் கண்டு பரவசமெய்திப் பாடுகின்றான்.

விறார்ந்த உணர்ச்சிப் பெருக்குடையவை அவனுடைய தேசிய கீதங்கள்

"எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே - அதன்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடித்ததும் இந்நாடே"

தந்தையரும் தாயாரும் முன்னோரும் ஆண்டாண்டு காலமாக மகிழ்ந்து குலாவி வாழ்ந்த மண் என்று கூறும் பாரதியின் பாடல்கள் பாரத நாட்டின் பெருமைகளை விளக்குவனவாய் அமைகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதியார் காலத்தில் முனைப்புற்றிருந்த பெண்ணடிமை, வறுமை, சாதிப்பாகுபாடு இவை மூன்றும் விரைவில் தீர்க்கப்படவேண்டும் என விரும்பியவன் பாரதி. பெண்ணின் அக்கால அவல நிலையை உணர்ந்து பெண்ணினம் விடுதலை பெறவேண்டும் என்ற சிந்தனைகள் தேசப்பாடல்கள், தெய்வப்பாடல்கள், சமூகப்பாடல்கள் என்பவற்றிலும், காவியமாக விளங்கும் பாஞ்சாலி சபதத்திலும் ஓங்கி ஒலிக்கிறது. ஆணாதிக்க சமுதாயம் அன்று வகுத்த பெண்மைக் குணங்களான அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்பவற்றை ஒழித்து ஞானம், நல்லறம், வீரசுதந்திரம், நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை என்பன பெற்று பெண்கள் மிளிர்தல் வேண்டும் என விரும்பிய பாரதி

"நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்
ஞான நல்லறம் வீர சுதந்திரம்
பேணு நற்குடிப் பெண்ணின் குணங்களாம்"

என விடுதலை பெற்ற பெண்களின் ஒழுக்கங்கள் சிந்தனைகள் பண்புகள் எவ்வாறு அமைய வேண்டும் எனக் கனவு கண்டவன் பாரதி.

தமிழினம் எவ்வெவ் வகையில் ஏற்றம் பெற்று விளங்க வேண்டும் என எண்ணிய பாரதியின் நோக்கங்கள் "உயிர்பெற்ற தமிழர்பாட்டில்" நன்குணர்த்தப்படுகின்றன.

கண்ணனைப் பல்வேறு பாவங்களில் வைத்துப் பாடுகின்ற கண்ணன் பாடல்கள் பாரதியின் ஆன்மீக ஈடுபாட்டோடு சமூகவிழிப்புணர்வையும் ஊட்டுவனவாய் அமைந்தன. ஆன்மீகப் பாடல்கள் பலவற்றைப் பாடிய பாரதியின் "குயில் பாடல்கள்" ஆன்மீகத்துடன் இணைந்த தத்துவக் கருத்துக்களை விளக்குவனவாய் அமைந்தன.

இவன் பாடிய பாப்பா பாட்டு சின்னஞ்சிறு பாலகர்களையும் தட்டி எழுப்புவனவாய் அமைந்தன.

"சாதிகள் இல்லையடி பாப்பா
குலத் தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்"

என்று சாதிப்பாகுபாட்டினை பிஞ்சு உள்ளங்களிலிருந்தே கீண்டி எறிய முற்பட்டவன் பாரதி. தனது வாழ்விலும் வறுமையின் எல்லையையே கண்ட பாரதி பாரத தேசத்தின் வறுமையையும் காணத் தவறவில்லை.

"கஞ்சி குடிப்பதற்கிலார் - அதன்
காரணங்கள் இவை யென்னும் அறிவுமிலார்
பஞ்சமோ பஞ்சம் என்றே நிதமும்
பரிதவித்தே உயிர் துடிதுடித்து
துஞ்சி மடிகின்றனரே..."

எனக் கவலை கொள்ளும் பாரதி அதற்கான தீர்வையும் முன்வைக்கின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனம் செய்வோம்
வீணே உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்"

என வறுமையை நீக்க வழிகூறும் பாவலன்

"எட்டுத் திசையிலும் சென்றிவை விற்றே
எண்ணும் பொருளனைத்தும்
கொண்டுவருவோம்
ஓயுதல் செய்யோம் தலை சாயுதல் செய்யோம்"

என்னும் பாடல் அடிகளும் வறுமைப் பிணியை போக்கும் வழிகளாய் அமைந்தன.

"செந்தமிழ் நாடென்னும் போதினிலே
இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே"

என்று தமிழ் நாட்டின் மீதும் தேமதுரத் தமிழ் என்று தமிழன் மீதும் பாரதி கொண்ட பற்றும் பாசமும் தாகமும் எவையென்பதை அறியலாம்.

நூறு ஆண்டுகள் வாழ விரும்பிய பாரதி 39 ஆண்டுகளே வாழ முடிந்தது. இக் குறுகிய காலத்தில் எல்லோரும் வியக்கத்தக்க வகையில் கவிதைகள் யார்த்த பெருமை பாரதியையே சாரும். கற்றோரும், மற்றோரும் பொருள் விளங்கத்தக்க வகையில் கவிதைகள் அமைத்தமையால் அவை ஜனரஞ்சகத்தைப் பெற்றன.

மகாகவி சுப்பிர மணியபாரதியின் உத்தம சீடனான பாதி தாசன் குருவைப் போற்றியது மட்டுமல்லாமல் பாரதியின் புகழ் பரவக் காரணமாயிருந்தவன். சமகாலத்தில் வாழ்ந்த சில அறிஞர்களால் பாரதியின் புதுமைக் கருத்துக்களை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. பாரதியின் பெருமைகளை அறிந்திராதவர்களைக் கண்டு வெகுண்டெழுந்த பாரதி தாசன்

"அழகொளிசேர் பாரதியார்
கவிதை தன்னை
அறிந்திலதே புவி என்றால்"

புவி மேல் குற்றம் என்றார். எனவே காலத்தால் அழியாத கவிதைகளை யாத்த பாரதியின் புகழ் இன்று எல்லோர் நாவையும் இனிக்கச் செய்து கருத்தைக் கவர்வனவாய் அமைந்து காணப்படுபவை. காலதேச எல்லைக்குட்படாதவை. கற்கும் தோறும் கற்கும் தோறும் இனிமை பயப்பவை. "கம்பனைப்போல், வள்ளுவனைப்போல் இளங்கோவைப்போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை" எனப் போற்றிய பாரதியை "பாரதியைப்போல் யாங்கணுமே கண்டதில்லை பூமியிலே" எனப் போற்றப்பட வேண்டிய கவிஞன் மகாகவி பாரதி.

திருமதி. இ. இராஜசேகரம்
யா/பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அலை அலையாய்... மின்காந்த அலைகள்

எம்மைச் சூழவுள்ள வளிமண்டலத்தில் புலனுணர்வால் அறியப்படமுடியாத பல்வேறு அலைகள் காணப்படுகின்றன. ஏமது கட்புல எல்லைக்கு உட்பட்ட ஒளி அலைகளும் செவிப்புல எல்லைக்கு உட்பட்ட ஒலி அலைகளும் மட்டுமே எம்மால் உணரப்படக்கூடியவை. இவற்றை விட தொடர்பாடலுக்கு பயன்படும் பல்வேறு அலைகளும் அலை அலையாய் அலைந்து கொண்டிருக்கின்றன.

***மின்காந்த அலைகள்*** Electro magnetic waves

மின்னின் இயல்பினையும் காந்தத்தின் இயல்பினையும் கொண்ட அலைகள் மின்காந்த அலைகளாகும். இவை குறுக்கலை வடிவில் ஊடுகடத்தப்படும். $3 \times 10^8\ ms^{-1}$ எனும் வேகத்தில் செல்லும் இயல்புடையது. இவை பல்வேறு அதிர்வெண்களையும் வேறுபட்ட அலை நீளங்களையும் கொண்டவையாக மின் காந்த அலைத் தொகுதியில் காணப்படும். விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சியில் மின்காந்த அலைகள் அளப்பரிய பங்கினை ஆற்றி வருகின்றன.

## மின்காந்த நிறமாலை Electro Magnatic Spectrum






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்காந்த நிறமாலையில் அலைநீளங்களின் பெறுமானம், அதிர்வெண் பெறுமானம் என்பனவற்றிற்கேற்ப மின்காந்த அலைகள் வரையறுக்கப் பட்டுள்ளது. இம் மின்காந்த அலைகள் பற்றி தொடர்ந்து விரிவாக ஆராயப்படுகின்றது.


**X கதிர்கள் X – Rays**

மருத்துவ உலகில் மிகவும் பயன்பாடுடைய கதிர்களாக இவற்றைக் குறிப்பிடலாம். இதனை 1895ம் ஆண்டு ஜேர்மன் நாட்டுப் பல்கலைக் கழகப் பேராசிரியர் ரொஞ்ஜன் (Roentgen) கண்டுபிடித்தார்.

கதோட் கதிர்க் குழாய் ஒன்று உருவாக்கப்பட்டு சிறிது தூரத்திலுள்ள பேரியம் பிளாற்றினோ சயனைற்று திரையில் ஒளிர்தல் ஏற்படுத்தப்பட்டது. இங்கு குழாயின் கண்ணாடியைத் தாக்குபவை புதுவிதக் கதிர்வீச்சாகக் காணப்பட்டது. இக் கட்புலனாகாத கதிர்களை தெரியாக் கதிர்கள் (Unknown Rays) என ரொஞ்ஜன் குறிப்பிட்டார். புதிய கதிர்வீச்சு X கதிர்கள் அல்லது ரொஞ்ஜன் கதிர்கள் (Roentgen rays) என அழைக்கப்பட்டது. இவ் X கதிர்கள் கண்டுபிடிக்கப்பட்டமைக்காக 1901ல் ரொஞ்ஜனுக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது.

**X கதிர்கள் உற்பத்தி**

X கதிர்கள் X கதிர்க் குழாய் மூலம் உற்பத்தியாக்கப்படுகின்றது. தற்போது பயன்படுத்தப்படும் X கதிர்க் குழாயின் எளிய அமைப்பு கீழே உள்ள படத்தில் காட்டப்பட்டுள்ளது.




இங்கு இலத்திரன்கள் இழக்கும் சக்தி காரணமாக X கதிர்கள் உருவாகின்றன. இலத்திரன்களில் 99.5%மானவை வெப்பமாக மாறுகின்றது. 0.5% சக்தி X கதிர்ப்பட உற்பத்திக்கு உதவுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோதும் இலத்திரன்களால் பிறப்பிக்கப்படும் உயர்ந்த வெப்பம் உயர் உருகுநிலையுள்ள தங்குதனால் தாங்கப்படும். இது செப்புக் கோலில் பதிக்கப்பட்டிருக்கும். செப்புக்கோல் வெப்பத்தைக் கடத்தி அதன்மேல் ஓடவிடப்படும் எண்ணெய் மூலம் குளிர்விக்கப்படும். X கதிர்களின் செறிவானது இலக்கை இடிக்கும் இலத்திரன் எண்ணிக்கைக்கு நேர் விகித சமனாகவிருக்கும். எனவே X கதிரின் செறிவு வழங்கப்படும் மின்னோட்டத்தில் தங்கியுள்ளது.

உருவாக்கப்படும் X கதிர்களில் குறைந்த அலை நீளமும் கூடிய சக்தியும் உடையவை வன் X கதிர்கள் எனப்படும். கூடிய அலை நீளமும் குறைந்த சக்தியும் உடைணவை மென் X கதிர்கள் எனப்படும். இவை சடப்பொருள்களை ஊடுருவும் ஆற்றல் சடத்தின் அடர்த்தியிலும் கதிரின் அலை நீளத்திலும் தங்கியிருக்கும்.

**X கதிரின் இயல்புகள்**

1. மின்காந்த அலைகளாகும்.
2. ஒளியைவிட அலைநீளம் குறைவானது.
3. ஒளியின் வேகத்துடன் நேர்கோட்டில் செல்லும்.
4. மின், காந்தப் புலங்களால் திசை பாதிப்படையாதது.
5. வாயுவினுள் செலுத்தும்போது அவ்வாயுவை அயனாக்கும்.
6. ஒளிப்படத் தகட்டைக் கறுப்பாக்கும்.
7. மனித எலும்புக்குள் செல்வதைக் காட்டிலும் தசைக்குள் எளிதாகச் செல்லும்.
8. மின்வாய்களிற்கிடையில் அழுத்த வேறுபாடு அதிகரிக்க வெளிவரும் கதிர்களின் ஊடுருவும் திறன் அதிகமாகும்.

**ஊதா கடந்த கதிர்கள் Ultra Violet Rays**

1801ம் ஆண்டு றிற்றர் (Ritter) என்பவரால் இக் கதிர்கள் கண்டுபிடிக்கப்பட்டன. சூரிய ஒளியினால் வெள்ளொளி நிறப்பிரிகைக்கு உள்ளாக்கப்பட்டபோது ஊதாவுக்கு அடுத்ததாக கட்புலனாகாத பகுதியில் கூடிய விளைவை ஏற்படுத்தியவை ஊதா கடந்த கதிர்வீசல் எனப்பட்டது.

ஊதா கடந்த கதிர்கள் பளிங்கு உருவங்கள் சேதனப் பொருட்களின் கதிர்வீசலை உறிஞ்சி கட்புலனாகும் கதிர்வீச்சாக மாற்றக்கூடிய தன்மையுடையவை.

**ஊதா கடந்த கதிர்களின் பயன்பாடுகள்**

1. விற்றமின் Aஐ இனங்காண உதவும்.
2. மீனெண்ணெயின் தரத்தை மதிப்பிட உதவும்.
3. தோலின் நிறமாற்றத்திற்கும் விற்றமின் D தொகுப்பிற்கும் உதவும்.
4. நுண்ணங்கிகளை அழிப்பதற்குப் பயன்படுகின்றது.
5. போலி நாணயங்களைக் கண்டுபிடிக்க பயன்படுகிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. புளோளொளிர்வு பதார்த்தங்களுடன் தாக்கமடைந்து வெள்ளொளியை உருவாக்கும்.
7. ஒளி இரசாயன விளைவுகள் மூலம் எலும்பு தோல் நோய்களிற்கு சிகிச்சையளிக்க முடியும்.
8. வெள்ளை ஆடைகளின் சலவைப் பவுடரின் புளோளொளிர்வுச் சேர்வை சூரிய ஒளி கழி ஊதா கதிர்களால் மேலும் மெருகடையும்.

### கட்புலனாகும் திருசியம் Visible Spectrum

கட்புலனாகும் ஒளி அலைகளின் அலை நீளத்திற்கேற்ப நிறம் தீர்மானிக்கப்படும். ஊதா, கருநீலம், நீலம், பச்சை, மஞ்சள், வெம்மஞ்சள், சிவப்பு (vibgyor) என அவை ஒழுங்குபடுத்தப்படும். கண்ணாடி அரியமொன்றில் ஒடுக்கமான சூரியஒளிக் கற்றையை செலுத்துவதன் மூலம் கட்புலனாகும் திருசியத்தைப் பெறமுடியும்.




திரையில் திருசியத்தைப் பெறும்போது கூடுதலாக விலகுபவை ஊதா நிற ஒளியாகும் குறைவாக விலகுபவை சிவப்பு நிற ஒளியாகும்.

கட்புலனாகும் ஒளி நேர் கோட்டில் செல்லும். செல்லும் பாதையில் முறிவு, தெறிப்புக்கு உள்ளாகும். ஆடிகள், வில்லைகள் மூலம் முறிவு, தெறிப்புக்கு உள்ளாகும் விதத்தினை அறிய முடியும். இது பற்றிய போதுமான விளக்கமும், பிரயோகமும் எமது அன்றாட வாழ்வில் அறிந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது.

### செங்கீழ்க் கதிர்கள் Infra Red Rays

இக் கதிர்வீச்சானது 1800ம் ஆண்ட வில்லியம் ஹேர்சல் (William Herschel) என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது.

நிறப்பிரிகையின்போது வெள்ளொளியில் சாதாரண வெப்பமானி மூலம் பல நிறக் கதிர்களின் வெப்பநிலை அளக்கப்பட்டது. அப்போது சிவப்புக் கதிர்களுக்கு சற்றுத் தொலைவில் காணப்பட்ட மிகப்பெரிய வெப்ப விளைவு செந்நிறக் கீழ்க் கதிர்களாகும். இவ் ஆய்வு 1840ல் இவரின் மகன் ஜோன் ஹேர்சலால் (John Herschel) அற்ககோலை விரைவாக ஆவியாக்கும் செயற்பாடுடைய கதிர்களாக செந்நிற கீழ்கதிர்கள் இனங்காணப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செங்கீழ் கதிர்களின் பயன்பாடுகள்**

1. இரசாயனச் சேர்வைகளைப் பகுத்தறிய நிறமாலையாக (Spectrum) பயன்படுகின்றது.
2. இரவு நேர பார்வை காட்டியாகப் பயன்படும்.
3. சேதனை மூலக்கூறுகளைத் தீர்மானிக்க உதவும்.
4. இராணுவ ரீதியில் அடையாளம் காட்ட உதவும்.
5. தொழிற் சாலைகளில் தீ ஏற்படுவதை முற்கூட்டியே கண்டறியலாம்.
6. அகிலத்தின் அற்புதங்களைக் கண்டறிய உதவும்.
7. மருத்துவ ரீதியில் உடலிலுள்ள கோளாறுகளை அறிய உதவும்.
8. வெப்பக் கதிர்ப்பு, செங்கீழ்க் கதிர்களால் ஆக்கப்பட்டவை நுண்ணலைக் கதிர்களாகும்.

**நுண் அலைகள்** Micro Waves

அண்மைக் காலங்களில் நுண்ணலைகளின் பயன்பாடு மிகவும் முக்கியத்துவப்படுகின்றது. நுண் அலைகளால் பிறப்பிக்கப்படும் வெப்பத்தால் உணவுப் பதார்த்தங்கள் வேகவைக்கப்படுகின்றன. இம்முறையில் அதிக வினைத்திறனுடன் குறைந்த போசணை இழப்புடன் மிகச் சுத்தமாக உணவைப் பதப்படுத்தலாம்.

**றேடார்** Radar Radio Detrction and ranging

இது நுண்ணலைகளின் பயன்பாட்டினால் இயங்கும் ஓர் உபகரணமாகும். இராணுவ, கைத்தொழில் ரீதியில் பெரிதும் பயனுடையது. றேடார் தனிக் கருவியல்லாது. பல்வேறு கருவிகளின் கூட்டமைப்பாகும். துல்லியமாகவும் துரிதமாகவும் தொலைவில் உள்ள பொருளின் இடத்தையும் தன்மையையும் நிர்ணயிக்க உதவுகின்றது.

றேடார் ஒரு ஆற்றல் மிக்க பரப்பியையும் நுண்ணுணர்வு உள்ள ஏற்பியையும் கொண்டுள்ள ஓர் தன்னிறைவு பெற்ற கருவியாகும். எதிரொலித் தத்துவத்திற்கமைய தனது செயற்பாடுகளை ஆற்றுகின்றது. நுண்ணலைகள் றேடார் பரப்பிலிருந்து ஆற்றல் மிக்க துடிப்புக்களாக (Very powerful pulse) வெளியே அனுப்பப்படுகின்றன. நீண்ட தூரங்களை $^{1}/_{25}{}^{s}$ இடைவெளியும் குறைந்த தூரங்களை $^{1}/_{5000}{}^{s}$ இடைவெளியும் கொண்ட துடிப்புக்களாக அனுப்பப்பட்டு தொலைவிலுள்ள இலக்கால் எதிரொலிக்கப்பட்டு றேடார் ஏற்பியை வந்தடைகின்றது. எதிரொலிக்கப்படும் மொத்த நேரம் மூலம் இலக்கின் தூரம் தீர்மானிக்கப்படும். திருப்பப் பெறும் துடிப்புக்கள் இடைநிலை அதிர்வெண் துடிப்புக்களாக மாற்றப்பட்டு பின் அவை பெருக்கப்பட்டு வீடியோ (video) சைகைகளைப் பெறுவதற்கு உதவுகின்றன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வானொலி அலைகள் (Radio Waves)**

வானொலி அலைகளில் அதியுயர் மீடிறன் ($10^7$-$10^9$Hz) வரிசைக்குட்பட்டவை தொலைக்காட்சி ஊடுகடத்தலுக்கு பயன்படுகின்றன. இவற்றில் குறைந்த மீடிறன் வரிசைக்குட்பட்டவை ($10^5$-$10^7$Hz) வானொலி ஊடுகடத்தலுக்குரியவை.

**தொலைக்காட்சி ஊடுகடத்தல்**

UHF – Ultra High Frequency
VHF – Very High Frequency




மேலே காட்டப்பட்ட படத்தில் காட்டியவாறு தொலைக்காட்சிக் கமரா மூலம் பெறும் விம்பங்கள் அலகிடல் (scan) செய்யப்பட்டு மின் சமிக்ஞைகளாக மாற்றப்படும். இவை மேம்படுத்தப்பட்டு கட்புல மின் சமிக்ஞைகளாக (Video Signals) மாற்றப்படுகின்றன. நுணுக்குப்பன்னி ஒலியலைகள் மின் சமிக்ஞைகளாக மாற்றப்பட்டு விரிவாக்கம் செய்யப்பட்டு கேள் மின் சமிக்ஞைகளாக (Audio Signals) மாற்றப்படுகிறது. இவையிரண்டும் UHF அல்லது VHF எல்லைகளில் காவி வானொலி மின் அலைகளுடன் மட்டிசைக்கப்பட்டு ஓரலையாக ஒளிபரப்பு உணர்கொம்பின் (Antenna) மூலம் ஒளிபரப்பப்படும். இவை தொலைக்காட்சியின் உணர்கொம்புவரை அலைகளாகக் கடத்தப்பட்டு தொலைக்காட்சியில் வேறு பிரித்து அறியப்படும்.

**வானொலி ஊடுகடத்தல்**

AM – Amplitude Modulation
FM – Frequency Modulation

| | | |
|---|---|---|
| AM Radio – | SW | $3333 \times 10^3$ - $23000 \times 10^3$ Hz |
| | MW | $550 \times 10^3$ - $1600 \times 10^3$ Hz |
| | LW | $140 \times 10^3$ - $400 \times 10^3$ Hz |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு தோற்றுவிக்கப்படும் இருவகை அலைகளாவன

1. வீச்சு மட்டிசைத்த அலைகள் (AM)
   காவி அலைகளின் வீச்சு மாறுதலுக்கு உள்ளாகும்.

2. மீடிறன் மட்டிசைத்த அலைகள் (FM)
   காவி அலைகளின் மீடிறன் மாறுதலுக்கு உள்ளாகும்.




படத்தில் காட்டியவாறு நுணுக்குப்பன்னியால் கேள் மீடிறன் மின் அலைகள் வானொலி மீடிறன் மின் அலைகளுடன் கலந்து மட்டிசைக்கப்பட்ட மின்னலையாகி விரிவாகி ஒலிபரப்புக் கோபுரமூலம் ஒலிபரப்பப்படுகின்றது. வானொலியின் ஒலி அலை வாங்கும் அமைப்பின் மூலம் இவ் அலைகள் ஒலி அலைகளாக இனங்காணப்படுகின்றது.

மின்காந்த அலைகளில் அண்டவெளிக் கதிர்கள் எனப்படும் கொஸ்மிக் கதிர்களும் X கதிர்களை விட குறைந்த அலை நீளமுள்ள & கதிர்களும் அடங்கும். இவை உயர்ந்த மீடிறன் கொண்டவை. இவற்றின் பயன்பாடுகள் பற்றி தொடர்ந்தும் ஆராய்ச்சிகள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. மின் காந்த அலைகள் பற்றி ஆராய்ச்சி வளர விஞ்ஞான தொழில்நுட்ப துறையும் வளர்ந்து செல்லும் என்பதில் ஐயமில்லை.

தொகுப்பு திரு. வே. சிவசக்திவேல்
ஆசிரியர்,
யா/பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Why should we learn English Language?

Language is a means of communication. Language is a vehicle of thought. English is the only language that occupies a unique place in the modern world and excels all the rest in every sphere of human endeavor whether it is in the field of Arts, Science, Technology, Commerce and Diplomacy.

In countries like England, the U.S.A., Canada, Australia and several parts of Africa, it is the first language. In many common wealth countries like Sri Lanka, India and Malaysia, it is a second language.

In the Soviet Union, Japan, Germany, France, China and in several other countries, it is taught and learnt as a very useful foreign language to improve and increase knowledge and to enrich lives in many ways.

English is a gateway to knowledge. It helps a student to a mass knowledge. English is an international language and it can promote an international understanding. Hence all students must make a genuine effort to learn English.

The first prime minister of India, late Mr. Jawaharlal Nehru once beautifully described English as a "window to the world". Another equally famous Indian scholar and statesman the late Rajaji declared English, "a gift by the Goddess to learning to India". H.G. Wells, the famous British Historian and Novelist, once said that English is a language of world brotherhood and international understanding.

Information Technology, has been identified as one of the fastest growing sectors in the world. It means big business in the developing countries today. English has become the language of international commerce, popular culture and the internet. English and computer have seemed for decades to go together.

English is the medium for 80% of the information stored in the world's computers. It is certainly true that growth of computer use and the internet in particular has been spectacular in the last few years. Computer here become extensively networked and the networks themselves linked into the global structure of Internet.

The Internet carries English language services into nearly country. It is claimed that data traffic has now overtaken voice traffic in the developed world. The electronic media that bind the world together are essentially carries of language. To work



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

efficiently, they need a common standard. The English language is now operating standard for global communication.

One could also learn English for intellectual satisfaction. English offers a wide range information through magazines, periodicals, the radio, television and Internet for the learner who seeks English has so much to offer.

We all know that in recent times there has been a great revolution in the fields of information and education with the coming of television and Internet. Better and more effective methods have been possible with their systems. The study of English is necessary to acquire modern scientific and technical and technological knowledge to develop our country agriculturally and scientifically.

A further aim could be need, the thirst to understand other cultures and eventually to recognize one's place in the large mass of humanity, language is interwoven with culture, what I have in mind is not necessarily for British culture but all cultures, African, Australian, or Indian. Even the household today is changing rapidly, most housewives more away from the traditional methods of cooking and home making house hold chores have been made easier with modern equipment. Quickly and easier methods of food preparations have replaced the more cumbersome old methods, the science and Technology involved in these areas, invite even the simple housewife to be more proficient in reading and understanding instruction in and English language.

Also in farming and agriculture, more and more people are interested in new technology. They try to get the latest information in livestock breeding. They also need modern and scientific knowledge in the selection of better seeds, controls pests and weeds, the quickest way to get this information is through English.

A student who is eager and wealthy dreads to go to a university in the west for higher education because he/she does not know English. Moreover, the chances of getting a job for one with a basic knowledge of English are certainly greater not only in our land but in any part of the world.

If there is a language today that is full, rich, universal and helps everyone in some way or other, it is certainly English. Hence English anywhere, any time and to anyone holds the key to knowledge. So, each and every person should learn English to do his job justly, skilfully and magnanimously.

**Mrs. F.R.J.Jeyanthan**
**Teacher,**
**J/Pandateruppu Girls High School.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுத்தகவல் தொழில்நுட்பக் கிருத்தியம்

## GIT General information technology

பொதுத்தகவல் தொழில்நுட்பக் கிருத்தியம் (Curriculum) ஆங்கில மொழிமூலம் ஆண்டு 12க்கு அறிமுகப்படுத்தப்பட்டதை அடுத்து, ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இப்புதிய பாடநெறியில் வழிகாட்டல் தேவைப்படுகிறது.

இலங்கை முழுவதும் பரந்துள்ள பாடசாலைகளில் ஆசிரியர்கள், மாணவர்கள் இதை விளங்கிக்கொள்வதில் எதிர்நோக்கக்கூடிய சிக்கல்களைத் தவிர்த்தற்பொருட்டு தேவையான பாட உள்ளடக்கத்தைக் கொண்டதாக இத்தொடரை ஆரம்பித்துள்ளோம். ஆசிரியர்களும், மாணவர்களும் இதனைத் தமது கற்பித்தலுக்கும், கற்றலுக்கும் பிரயோகிக்கலாம்.

## தகவல் தொழில்நுட்பத்தின் அடிப்படை

### தகவல் தொழில்நுட்பத்திற்கான அறிமுகம்

**தகவல் தொழில்நுட்பம்**

கணினிகளின் உதவியுடன் தகவலை ஒழுங்கமைப்புச் செய்தல். கணினியியல், இலத்திரனியல், தொலைத்தொடர்பு போன்ற தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி தகவலை Digital மற்றும் வேறு வடிவங்களில் ஒழுங்கமைப்புச் செய்தல், பரிமாற்றல் என்பன தகவல் தொழில் நுட்பத்தினுள் அடங்கும்.

### தகவல் தொழில் நுட்பத்தின் பாவனையும் முக்கியத்துவமும்

**தகவல் தொழில் நுட்பம் என்றால் என்ன?**



கணினிகளினூடு தகவலை ஒழுங்கமைப்புச் செய்தல். கணினியியல், இலத்திரனியல், தொலைத்தொடர்பு போன்ற தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி தகவலை digital மற்றும் வேறு வடிவங்களுக்கு ஒழுங்கமைப்புச் செய்தல் பரிமாற்றல் என்பனவாகும் தகவலைப் பெற்று, சில குறிப்பிட்ட செயற்பாடுகளை (Operations) நிகழ்த்தி, செயற்பாடுகளிலிருந்து பெற்ற பெறுபேறுகளை விளக்கமாக, படிப்படியான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிகாட்டலுக்கேற்ப வழங்குகின்ற ஒரு இயந்திரமாக கணினி வரையறுக்கப்படலாம். இப்படியாக கணினியை - ஒரு செயற்பாட்டைச் செய்யும்படி பணிக்கும் ஒழுங்கான ஒரு தொகுதி ஆணைகள் **Program** எனப்படும்.
கணினியானது ஒரு அறிவு சம்பந்தமான **(Intelectual)** விரிவாக்கி. அது மேற்கூறிய செயற்பாடுகளை விரைவாகவும், திருத்தமாகவும், வினைத்திறனான முறையிலும் செயற்படுத்தும். இதன்மூலம் மனிதன் தனது நேரத்தை ஆக்கபூர்வமான சிந்தனைகள் மற்றும் தீர்மானங்கள் மேற்கொள்ளல் போன்றவற்றில் பயன்படுத்தலாம். கணினிக்கு உரித்தான இயல்புகளைப் பின்வருமாறு நிரல்படுத்தலாம்.

## வேகம்

கணினியானது எண்கணிதச் செயற்பாடுகள், ஆவணங்களை இடமாற்றல் **(move)**, மற்றும் பிரதி **(copy)** செய்தல் போன்றவற்றை ஒரு நிமிடத்திற்கு மில்லியன் அல்லது பில்லியன் ஆணைகள் **(Instructions)** என்ற வேகத்தில் செயற்படுத்தும்.

## திருத்தம்

கணினிகள் மிகத்திருத்தமானவை. மில்லியன் எண்ணிக்கையான செயற்பாடுகளை மிகத்திருத்தத்துடன் செயற்படுத்தும். ஏனெனில் அதன் சுற்றுக்கள் தேய்வடையக்கூடிய **(wear)** மற்றும் குறைசெயற்பாடாற்றக்கூடிய இயந்திரவியல் **(mechanical)** பாகங்கள் அற்றது.

## நம்பகத்தன்மை

கணினியின் உட்செலுத்தும்**(input)** தகவல் மற்றும் **Program Instructions** (நிகழ்வு ஆணைகள்) நம்பகரமானதாகவும் நிரந்தரமானதாகவும் இருந்தால், அதன் தீர்வுகள் **(Output)** பொதுவாக நம்பகரமானதாக இருக்கும்.

## சேமித்தல் தகமை

வர்த்தகச்சூழலில் அதிமுக்கிய பதிவுகள் **(records)**ஐ பேணுகையில் பாரிய அளவில் **(save)** சேமிக்க முடிகிறது. ஏனெனில் பலவகை கணினி ஊடகங்கள் மில்லியன் எண்ணிக்கையான தகவலை ஒடுக்கிய வடிவத்தில் சேமிக்கக்கூடியவை.

## தொடுகையின்றிய நன்மைகள்

பல கம்பனிகள் (தொழில் ஸ்தாபனங்கள்) கணினியை, உருவமற்ற நன்மைகளான வளர்ச்சியையும் மற்றும் உளவியல் காரணிகளையும் உள்ளடக்கும் தன்மையால் வாடிக்கையாளர்களைக் கவருதல் போன்றவற்றில் பயன்படுத்துகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைந்த கட்டணம்
கணினியின் விலையானது - தொடர்ச்சியாக அதிகரித்துவரும் தகவல் தொழில்நுட்பத்தின் அபிவிருத்தியினால் சென்ற ஆண்டுகளில் வெகுவாகக் குறைந்துள்ளது.

**இணையம்**
இணையம் என்பது வலையமைப்புக் குட்படுத்தப்பட்ட கணினிகளின் பாரிய வலையமைப்பாகும். இது மிகப் பெருமளவு ஒழுங்கமைப்புச் செய்யும் சக்தி யையும் பாரியளவிலான எழுத்து மூல மற்றும் ஒலி, ஒளி வளங்களையும் கொண்டது. இணையத்தின் கண்டுபிடிப்பும் வளர்ச்சியும் குறிப்பாக வர்த்தக உலகத்திற்கும் தொடர்பூடகத்திற்கும் புதிய பரிமாணத்தைக் கொடுத்துள்ளது.

**தகவல் தொழில்நுட்ப சமூகத்தின் தற்போதைய பங்களிப்பு (Role)**
இது பின்வருவனவற்றை உள்ளடக்கும் -
கணினி வழிகாட்டலில் கற்றல்.
கணினி வழிகாட்டலிலான பாடசாலை நிர்வாகம்.

**CAL**
CAL ஆனது கற்றலிலும், பயிற்சியளித்தலிலும் கணினிகளைப் பயன்படுத்தலைக் குறிக்கும்.

தற்பொழுது சக்திவாய்ந்த, தோழமையான (Friendly) மென்பொருட்கள் கொண்டும், Multimedia, வன்பொருள் (Hardware) மற்றும் கணினிகளால் அளிக்கப்படும் மென் பொருட்கள் என்பவற்றைப் பயன்படுத்தியும் கவர்ச்சியான கல்வித்துறை (Educational) மென்பொருட்கள் வடிவமைக்கப்பட்டு விருத்தியாக்கப்படுகிறன.

இவற்றை இணையத்துடன் சேர்க்கும்போது கல்வியில் பிரப லமாக 'E-learning' என அழைக்கப்படும் ஒரு புதிய பரிமாணம் உருவாகிறது.

இதன் மூலம் உலகின் ஒரு மூலையில் இருந்து மற்றொன்றிற்கு கல்வியை உடனடியாக வழங்கக்கூடிய வாய்ப்பு உருவாகியுள்ளது.

**•(AL இன் மூலங்கள்**
- **பல் தேர்வு வினாக்கள்**
- **செயற்பாடு மற்றும் பயிற்சி**
- **முன்னோடிகள்**
- **கல்வித்துறை விளையாட்டுக்கள்**
- **பிரச்சனைகளுக்கு தீர்வுகாணும் Tutotial.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணினி வழிகாட்டலிலான பாடசாலை முன்னேற்றம்

இது தகவல்தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பாடசாலை நிர்வாக செயற்பாடுகளைத் தன்மயமாக்கல்.

- உதாரணமாக மாணவர்களின் பதிவுகளை பேணல், பரீட்சை பெறுபேறுகள், வழமையான அலுவலக வேலைகள், மற்றைய பாடசாலைகளுடன் e-mail ஊடாக தொடர்பு கொள்ளல் இன்னும் பல.

## கணக்கியலும் வங்கியியலும்

தகவல் தொழில்நுட்பமானது மனிதவளம் மூலமான கணக்கியல் தொகுதிகளை தன்வயப்படுத்தலில் உதவுகிறது.

உதாரணமாக - பொதுப்பேரேடு, விற்பனை, கொள்வனவு, சரக்கிருப்பு ((விற்பனை ஸ்தானத்தை) நேரடியாக சரக்கிருப்பு Database உடன் தொடர்புபடுத்தல்) போன்றவை.

வங்கியில் ATM இயந்திரம் பயனுள்ள தகவல் தொழில் நுட்பத்தின் பிரயோகமாகும்

## பொறியியல்

பொறியியலாளர்கள் தகவல் தொழில்நுட்பத்தை பயன் படுத்தி இயந்திரங்கள், கருவிகள், பாலங்கள், கட்டிடங்கள் போன்றவற்றின் வரைபடங்களை தயார்செய்வர் (CAD).கணினிகள் பொருட்களின் உற்பத்தியை கட்டுப்படுத்தலிலும் பயன்படுகிறது (CAM).கைத்தொழிலில் இயந்திரமனிதனின் பயன்பாடு மற்றொரு உதாரணமாகும்.

## போக்குவரத்து

போக்குவரத்தில் தகவல் தொழில்நுட்பமானது புகையிரதம் மற்றும் விமானப்பயணங்களில் ஆசனப்பதிவுகள், வாகன போக்குவரத்தை கட்டுப்படுத்தல், வாகனங்களுக்கான மற்றும் ஊழியர்களின் கடமைகளுக்கான நேர அட்டவணைகளை தயாரிப்பதிலும் பயன்படும்.

வான்மூல பயணங்களின் அனைத்து ஊடகங்களிலும் பயன்படும். ஒவ்வொரு வானூர்தியும் ஒரு சிறிய கணினியை கொண்டிருக்கும். விமானிக்கு பல்வேறு வழிகளில் உதவுவதற்காக.

## வைத்தியசாலை

வைத்தியசாலைகளில் விசேட கணினிகள் வெவ்வேறு கருவிகளின் உள்புறத்தில்பொருத்தப்பட்டிருக்கும். உதாரணமாக CAT Scanners. மேலும் நோயாளர்களுக்கான பதிவுகளை இலத்திரனியல் Database இல் பேணுவதானது அவர்களுக்கான சேவைகளை மேம்படுத்த உதவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாப்பு
தகவல் தொழில்நுட்பமானது குற்றவாளிகளுக்கான Database ஐ பேணுவதன் மூலம் அவர்களைத் தேடிக் கண்டுபிடித்தலை இலகுவாக்கும்.போர்க்காலங்களில் கணினிகள் பீரங்கிகுண்டுகளை (Missiles) நெறிப்படுத்த உதவும்.

பொழுதுபோக்கு
அடிப்படையில் இது ஒளி (video) விளையாட்டுகள், சங்கீதம், Multimedia வசதியுள்ள கணினிகளில் திரைப்படங்கள் பார்த்தல் போன்றவற்றை உள்ளடக்கும்.விசேட தேவைக்கான கணினிகள் நவீன வீட்டு உபகரணங்களான சலவை இயந்திரம், நுண் அலை வெதுப்பி, தொலைக்காட்சிப் பெட்டி மற்றும் Video cassette player போன்றவற்றில் பயன்படும்.

## DATA & INFORMATION
## தகவல்

கணினியில் சேமிக்கக்கூடிய அல்லது கணினியால் ஒழுங்கு செய்யக்கூடிய வடிவத்திலுள்ள எண்கள், எழுத்துக்கள், உருவங்கள் மற்றும் ஒலி வடிவம் என்பன Data எனப்படும்.

## Information

உள்ளடக்க அர்த்தத்தை அறிந்து கொள்ளும் வகையில் ஒழுங்கமைக்கப்பட்டு நேர்த்தியான வடிவத்தில் வழங்கப்படும் கணினித் தகவல்கள்.

மாற்றீட்டுப் பொறி முறை    Informal Processing



பெற்றுக்கொள்ளல், பதிவுசெய்தல், ஒழுங்கமைத்தல், மீளப்பெறல், பிரசுரித்தல் மற்றும் தகவல்களைப் பரப்புதல் என்பன போன்ற பிரயோகங்கள் கடந்த சில ஆண்டுகளில் கணினி மயப்படுத்தப்பட்ட செயற்பாடுகளுக்கு சிறப்பாகப் பயன்படுத்தப்படுகின்றன.

கணினியில் Input Device ஊடாக பெறப்பட்ட தகவல் Data ஒழுங்கமைப்புச் செய்யப்படுவதற்குமுன் memory இல் சேமிக்கப்படும்.

இங்கு ஒழுங்கமைப்பு (Processing) குறிப்பது எதுவெனில் கணினியில் உள்ள (Processes) செய்முறைகள் மூலம் தகவலை மாற்றம் செய்தல். இது கணிதச்செயற்பாடாகவோ அல்லது தர்க்கரீதியான (Logic) செயற்பாடாகவோ (உருப்படிகளை ஒப்பிட்டு ஆம் அல்லது இல்லை என்ற முடிவுக்குவரல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றவை) இருக்கலாம்.பெறுபேறுகள் Output Device மூலம் பெறப்பட்டு, கணினியில் எதிர்காலத் தேவைக்காகச் சேமிக்கப்படலாம்.

## Information இன் இயல்புகள்

Information இன் ஓர் உருப்படி பின்வரும் இயல்புகளைக் கொண்டது.

**திருத்தம்**

Informaiton சரி அல்லது தவறு; திருத்தம் அல்லது திருத்தமில்லை.

**மாதிரி**

இது பண்பறி ரீதியான, அளவறிரீதியான என்றோ - எண் மூலமான, வரைபடம் மூலமான என்றோ - சாராம்சமான, விளக்கமான என்றோ விவரிக்கப்படும்.

**அதிர்வெண்**

இது எவ்வளவு காலத்தில் Information தேவைப்படுகிறது, சேகரிக்கப்படுகிறது அல்லது தயாரிக்கப்படுகிறது என்பதன் அளவையாகும்.

**சுவாசம்**

இது Information இன் வரையறையை வரையறுக்கிறது.

**உற்பத்தி**

Information தாபனத்தற்கு உள்ளான அல்லது வெளியான வளங்களிலிருந்து பெறப்படலாம்.

**நேரவரையறை**

Information ஆனது இறந்தகாலத்தையோ, நிகழ்காலத்தையோ அல்லது எதிர்காலத்தையோ மையப்படுத்திய செயற்பாடுகள் மற்றும் நிகழ்வுகளாக இருக்கும்.

**ஒரு தகவல் தொகுதி பின்வரும் இயல்புகளை உடையது**

**பொருத்தம்**

தகவல் ஒரு செயற்பாட்டு சந்தர்ப்பத்திற்கு தேவையாயின் பொருத்தமானது.

**பூர்த்தி**

பூர்த்தியானது தகவல் ஒரு குறித்த சந்தர்ப்பத்தைப்பற்றி பாவனையாளர் ஒருவர் தெரிந்துகொள்ள வேண்டிய அனைத்து விடயங்களையும் கொடுக்கும்.

**பொருத்தமான நேரம்**

தேவையானபோது பெறக்கூடிய தகவல் ஆனது உரிய நேரத்திற்கு கிடைக்கும் தகவலாகும். மற்றையது நேரதாமதத்தால் காலாவதியான தகவலாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தகவல் தொழில் நுட்ப கருவிகள்

தகவல் தொழில்நுட்பக்கருவிகள் என்பது தகவல் Processingகுக்குப் பயன்படும் மென்பொருள் அல்லது வன்பொருள் ஆகும். உதாரணமாக, Input Output Device பிரயோக மென் பொருள்... இன்னும் பல.

பகுதிகள் **(Processor) Memory. I/O Device) Input devices**



### Processor

எந்தக் கணினியினதும் இதயத்திற்கு ஒப்பான பகுதி processor தொகுதியாகும். இது பின்வருவனவற்றை உள்ளடக்கும். Arithmetic and logic unit, கட்டுப்பாட்டுக்கூறுகள் மற்றும் registers எனப்படும் சிறிய நினைவகத் தொகுதிகள்.

### Arthmetic & Logic Unit

சகல கணிப்பீடுகளும் (கணிதரீதியான) மற்றும் சகல ஒப்பீடுகளும் (தர்க்க ரீதியான தொழிற்பாடுகள்) இத்தொகுதியில் நடைபெறும்.

### கட்டுப்பாட்டுத் தொகுதி

நினைவகத்தில் இருந்து பெறும் ஆணைகளை விளக்குதல் மற்றும் ஆணையை செயற்படுத்துவதற்குத் தேவையான ஒழுங்கான / தொடர்ச்சியான நிகழ்வுகளை நெறிப்படுத்தல் போன்றவற்றை இத்தொகுதி செய்கிறது. கட்டுப்பாட்டுத் தொகுதியானது ஒரு தொகுதி கடிகாரத்தை (System clock) பயன்படுத்தி மின்துடிப்புகளை அனுப்புவதன் மூலம் எல்லா கட்டளைகளையும் ஒருங்கிணைக்கிறது.

### Input Devices



#### Mouse

Mouse ஆனது ஒரு தகவல் உட்செலுத்தும் கருவியாகும். (Input device) இது desk top இலான தனது அசைவை digital தகவலாக மாற்றி கணினிக்குள் செலுத்தும். இதன் விளைவாக cursor கணினித்திரையில் அசைவுறும். Mouse இன் அடிப்பகுதியில் உள்ள ஒரு உருண்டை (ball) ஆனது, Mouse மேசையில் அசைக்கப்படும்போது உருளும். உணரிகள் இவ்வசைவை உள்வாங்கும். Mouse பொதுவாக இரண்டு அல்லது மூன்று விசைகளைக் கொண்டிருக்கும். இது திரையில் தேவையானதைத் தெரிந்தெடுக்க உதவும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வழிநடத்தும் பந்து [Tracker ball]


இது தலைகீழான Mouseஐப் போன்றது. இதில் பந்து பாவனையாளரால் உருட்டப்படும். ஆனால் இதில் Mouse அசையாமல் இருக்கும். பொதுவான Mouseகளுடன் ஒப்பிடுகையில் இதிலுள்ள நன்மை என்னவெனில் இது குறைந்த இடத்தையே எடுக்கும். இதனாலேயே Tracker ball பெருமளவுக்கு Lap வழி கணினிகளில் பயன்படுகின்றது.

தொடுகை உணரும் தகடு (Tough sensitive pad) தொடுகை உணரும்தகடு / வழிநடத்தும் தகடு (track pads) பொதுவாக notebook கணனிகளில் காணப்படுகின்றது. இங்கே ஒரு மெழுகு (stylus) காகிதத்தில் எழுதப் பயன்படும் பேனா (அல்லது உங்கள் விரலை) தகட்டுக்கு (pad) குறுக்கே அசைக்க அது cursor ஐ திரையில் நகர்த்தும்.

## ஒளிப்பேனா [Lightpen]



திரையை Light pen கொண்டு தொடுவதன் மூலம் திரையில் cursor ஐ நகர்த்தலாம். Light pen பிரதானமாக வடிவமைத்தல் (design) வேலைகளில் பயன்படுத்தப்படும். ஒரு விசேட மென்பொருள் இதனை இயக்கத் தேவைப்படும்.



தொடுகைக்கு உணர்வுள்ள ஒரு விசேட வகைத் திரை இதுவாகும். திரையிலுள்ள ஒரு Menu விலிருந்து தேவையான அதனொருபகுதியைத் தொடுவதன் மூலம் தெரிந்தெடுக்கப்படும். வங்கியிலும், கட்டடக்கழகங்களிலும் (Building society) பயன்படுத்துவதற்கு இத்திரை மிகப்பொருத்தமானது. இங்கு வழங்கப்படும் சேவைகள் பற்றிய தகவலை விசைப்பலகையை (Keyboard) பயன்படுத்துவதற்குப் பழக்கமற்ற வாடிக்கையாளர்கள் இதனைப் பயன்படுத்திப் பெறலாம். சிற்றுண்டிச் சாலைகள், மதுபானச்சாலைகள் போன்ற இடங்களிலும் இத்தொடுகைத் திரை பயன்படுத்தப்படுவதைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Graphics Tablets (Digitisers)

Graphics tablets என்பது பெரிதும் இலத்திரனியல் வரைதற் காகிதம் (Electronic tracing paper) மற்றும் காகிதம் (Paper) போன்றது. இது அனைத்து அளவுகளிலும் அதாவது சாதாரண அளவான A4விலிருந்து மேசையின் (desk) கணிசமான பகுதியை உள்ளடக்கக்கூடிய மிகப்பெரிய A0 அளவுவரை காணப்படுகிறது.



Cursor அல்லது pick tool ஐ graphic tablet இல் பயன்படுத்தி திரையில் போடப்பட்ட ஒரு தொழில்நுட்ப வரைபடத்தை அல்லது சித்திரத்தை Auto CAD போன்ற கணினிமயப்படுத்தப்பட்ட வடிவமைப்பு மென்பொருள் (Package) உதவியுடன் அதில் வரையலாம்.

## Magnetic stripe reader

Magnetic stripe readerகளை கணினி மயப்படுத்திய காசாளர் தொகுதி {பொதுவாக இலத்திரனியல் point of sale terminal (EPOS) எனப்படுவது} அருகில் காணலாம்.

## Barcord reader

Barcode (கறுப்புவெள்ளை வரிகள் கொண்ட குறியீடு) ஆனது நூலகத் தொகுதிகள், பல்பொருள் அங்காடிகள், விமானநிலையப் பொதிகள் கையாளும் தொகுதி மற்றும் சரக்கிருப்பு கட்டுப்பாடு போன்றவற்றில் பயன்படுகிறது. Barcode இப்போது முன்னேற்றமான நிலையில் உள்ளது. Readerகள் (அதாவது Barcodeஐ விளக்கமான தகவல் வடிவத்திற்கு மாற்றும் அமைப்புகள்) தமது செயற்பாட்டை ஏறத்தாழ 5அ அல்லது அதற்கு மேற்பட்ட தூரத்தில் நிகழ்த்த முடியும். இதனால் இத்தொகுதியின் பாவனை அதிகரித்துள்ளது.

## Optical character reader & Optical character recognition (OCR)

Optical character recognition என்பது எழுத்து வடிவத் தகவல் உட்செலுத்தலை scanner உடனும் அத்துடன் scan செய்யப்பட்ட வடிவத்தை மீண்டும் நிலையான ASCII code வடிவத்திற்கு அதாவது மீண்டும் எழுத்து வடிவத்திற்கு மாற்றக்கூடிய விசேட மென்பொருளின் உதவியுடனும் செய்கிறது.

## Optical Mark readers & Optical Mark recognition (OMR)

Optical Mark readerகள் விசேட படிவங்களில் குறிப்பிட்ட இடங்களில் காணப்படும் குறியீடுகளை உணரக்கூடியவை. இதில் கவனிக்கவேண்டியது என்னவெனில் ஒரு தனி எழுத்தை சேர்ப்பதற்கு 26 குறிகள் பயன்படுத்த வேண்டியிருக்கும். இதன் பயன்பாடுகள் யாதெனில் பல்தேர்வு வினாப்பத்திரம் திருத்தல், questionnaires (கருத்தறிய விடப்படும் வினாக்கொத்து) மற்றும் entolment forms (அங்கத்தினராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேரப்பயன்படும் படிவம்) போன்றவற்றிலிருந்து தகவல் சேகரித்தல், கால்பந்தாட்டக்குழு கூப்பன்களை சரிபார்த்தல் போன்றவையாகும்.

## நுணக்குப்பன்னி [Microphone]

நுணுக்குப்பன்னியானது குரல் அஞ்சல் தொகுதி (voice mail system)க்கான ஒரு input device ஆகப் பயன்படும். குரல் அஞ்சல் தொகுதியானது செய்தி அல்லது தகவல்களை அனுப்பல், சேமித்தல், பெறுதல் என்பவற்றில் இணையத்தைப் பயன்படுத்துகின்றது. இத்தொகுதி e-mail தொகுதிக்கு ஒப்பான முறையில் செயற்படுகிறது. ஆனால் எழுத்துமூல தகவல்களுக்குப் பதிலாக இங்கு பாவனையாளரின் குரல் disk இல் சேமிக்கப்படுகிறது. இணையத்திற்கான இணைப்பை வழங்கும் நிறுவனங்கள் அதாவது இணைய சேவை வழங்கிகள் (internet service providers (ISP)) தங்கள் server இல் குரல் தகவல்களை (voice message) சேமித்து வைத்து பின் பாவனையாளர், தொகுதிக்குள் செல்லும்போது (log on the system) அவர்களுக்கு குரல் அஞ்சல் தகவல் இருப்பதாக தெரிவிக்கும். பாவனையாளர் ஒலிபெருக்கியை out put deviceஆக பயன்படுத்தி அத்தகவலைப் பெறலாம்.

## குரல் அங்கீகாரம் [Voice recognition]

குரல் அங்கீகாரத்தில் நீங்கள் நேரடியாக கணினியுடன் கதைக்கலாம். இது குறிப்பாக, வரையறுக்கப்பட்ட அசைவுகளையே கொண்ட உடல் வலுவிழந்தோருக்கு உபயோகமானது. இது இப்பொழுது word processing or database மென்பொருளினுள் (packages) தகவலை (datas) உட்செலுத்துவதில் பிரபலமாகப் பயன்படுகிறது. நுணுக்குப் பன்னி இத்தொகுதிகளில் input device ஆகப் பயன்படும்.

## Electronic point of sale [EPOS] Terminal

EPOS முனைவுகள் (terminals) பணப்பதிவு இடாப்பாக (Cash registers) பயன்படும். அத்துடன் பிரதான கணினித் தொகுதிக்கு முனைவுகளாகவும் பயன்படும். இது வாடிக்கையாளர்களுக்கு பொருள்வாரியான பற்றுச்சீட்டு (receipt / bill) கிடைக்கவும் மற்றும் பயனுள்ள முகாமைத்துவத் தகவல்களைப் பெறவும் பயன்படும்.

## Point of sale இலான இலத்திரணியல் நிதி மாற்றீடு [Electronic fund transfer @ point of sale [EFTPOS] ]

EFTPOS முனைவுகள், EPOS முனைவுகளுக்கு ஒப்பானவை. ஆனால் சில கூடுதல் இயல்புகளைக் கொண்டிருக்கும். உதாரணத்திற்கு வரவு அட்டை (debit card) எனும் அட்டையைப் பயன்படுத்தி வங்கிக் கணக்கிலிருந்து நேரடியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேமிப்பு நிலைய / வியாபார நிலைய கணக்கிற்கு நிதி மாற்றீடு செய்தலைக் குறிப்பிடலாம். (Switch card) மாற்றீட்டு அட்டை இத்தகைய அட்டைக்கு உதாரணமாகும்.

உங்களிடம் debit அட்டை இருக்குமாயின் காசோலைக்குப் பதிலாக அதனைப் பயன்படுத்தலாம். அது பணம் செலுத்தலுக்கான ஒரு விரைவான முறையாகும். இதனால் வியாபார நிலையத்திற்கான அனுகூலம் யாதெனில் பணம் உடனடியாக வியாபார நிலையக் கணக்கிற்கு மாற்றப்படும். ஆனால் காசோலை. (credit card) செலவு அட்டையைப் பயன்படுத்தும்போது பணம் வியாபார நிலையக் கணக்கை அடைவதற்கு ஒரு காலதாமதம் ஏற்படும்.

இதில் சில பிரதிகூலங்களும் உண்டு. இவ்வட்டைகள் திருடப்படலாம் அல்லது போலிகள் பயன்படுத்தப்படலாம். மேலும் அது மக்களை அதிகம் செலவு செய்ய ஊக்கப்படுத்தும்.

## Video digitiser

ஒரு Video digitiser என்பது வன்பொருள் மென்பொருள் இரண்டினதும் சேர்க்கையால் உருவானது. இது கணினியின் mempry (ஞாபகம்) இல் Analogue video signalஐ (ஒலி,ஒளி சமிக்ஞை) Digital சமிக்ஞை ஆக மாற்றும். Video விலிருந்து ஒவ்வொரு சட்டகமும் (frame) Video digitiser ஐ பயன்படுத்த மாற்றப்பட்டு வேண்டிய எந்த ஒழுங்கிலும் பார்வையிடப்படலாம். Video frame (ஒலி, ஒளி சட்டகம்) எடுத்தல் மற்றும் Digitiser பொதுவாக Image grabbing அல்லது Frame grabbing எனப்படும்.

Grab செய்யப்பட்ட video image (ஒலி ஒளி உருவமைப்புகள்) பிரதான memory இல் அதிகளவு இடத்தை எடுப்பதுடன் சேமிக்கும் போதும் அதிகளவு disk இடத்தையும் எடுக்கும்.

Video digitising ஆனது Video தொடரிலிருந்து ஒரு சட்டகத்தை படமாக மாற்ற உதவும். அப்படமானது தனியாக வெளியீடுகளில் அல்லது ஆவணங்களில் print செய்யப்படலாம். Digitising தொலைக்காட்சி விளம்பரத் தயாரிப்பிலும் pop video தயாரிப்பிலும் பயன்படுகிறது.

## Scanner

Scannerகள், எழுத்துகள் மற்றும் படங்களை கணினி memoryக்கு scan செய்யும். இங்கு அவை print செய்யப்படுவதற்கு முன் எவ்வகையிலும் மாற்றம் செய்யப் படலாம். Scannerகள் மலிவான கையடக்க மானவையாக அல்லது தட்டையான (flatbed) A4 அளவில் அல்லது பெரிதாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Optical Character Re. gnition (OCR) இலும் scanner ஐப் பயன்படுத்தி ஒரு புத்தகப்பக்கத்திலுள்ள உருவம் scan செய்யப்பட்டு பின்னர் அதிலுள்ள இயல்புகள் தனியாக அங்கீகரிக்கப்படும் / இனங்காணப்படும். இவ்வாறு செய்யப்படுவதால் அவை தேவைப்படுமிடத்து Word processor ஐப் பயன்படுத்தி மாற்றம் செய்யப்படலாம்.

scannerகள் பொதுவாக OCR மென்பொருளை தமது விலையுள் உள்ளடக்கியதாக கொண்டிருக்கும். Desktop publishing (வெளியீடு) இல் புகைப்படங்கள் மற்றும் வேறு படங்களை Scan செய்ய Scanners பயன்படும். உருவமைப்புகள் scan செய்யப்படுகையில் எதிர் நோக்கப்படும் பிரதான பிரச்சினைகளிலொன்று அவை அதிகளவு இடத்தை Disk இல் பயன்படுத்துவதாகும்.

## Digital camera



**Digital camera**க்கள் பல காரணங்களுக்காக இப்பொழுது பிரபலமாகிவருகின்றன. அவற்றில் சில-

புகைப்படச்சுருள் தேவைப்படுவதில்லை.

புகைப்படம் விருத்தி செய்வதற்கான அதிக செலவு இங்கில்லை.

புகைப்பட உருவமைப்புகளை நேரடியாக scanner இன் உதவி இன்றி ஆவணங்களில் புகுத்தலாம்.

படங்கள் Digital வடிவில் இருப்பதால் உடனடியாக இணையத்தினூடாக அனுப்பலாம்.

நீங்களாகவே படத்தின் அளவை மாற்றவோ (பெரிதாக்கவோ/சிறிதாக்கவோ) அல்லது கத்தரிக்கவோ (அதாவது புகைப்படத்தில் தேவையான பகுதியை மட்டும் வெட்டியெடுக்கவோ) முடியும்.

**தொகுப்பு: நிலவு.com**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கிறோம்

எமது கல்லூரி அதிபர் செல்வி போஷேந்திராதேவி கந்தசாமி அவர்களின் சேவை நயப்பு விழாவை முன்னிட்டு வெளியிடப்பட்ட இம் மலருக்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

இம் மணிவிழா மலர் வெளியிடுவதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த பிரதி அதிபர், உப அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், நலன்விரும்பிகள், பழைய மாணவர்கள் அனைவருக்கும் நன்றி கூறுகின்றோம். ஆசிச் செய்திகள் வழங்கிச் சிறப்பித்த கல்வி நிர்வாக அதிகாரிகள் பெரியோர்களுக்கும் ஆக்கங்கள் தந்துதவிய நல்லிதயங்களுக்கும், மிகக் குறுகிய காலத்தில் இம்மலரை அழகுற அச்சிட்டு உதவிய பண்டத்தரிப்பு ஜே. எஸ். அச்சகத்தினருக்கும், மற்றும் பலவழிகளிலும் பங்களிப்பு வழங்கிச் சிறப்பித்த அனைவருக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மலர்க்குழு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக் கீதம்

வாழ்க வாழ்க வாழ்க இனிது
வாழ்க வாழ்க வாழ்கவே
பண்டத்தரிப்பில் இலங்கு மகளிர்
கல்லூரி இனிது வாழ்கவே - வாழ்க

தையலரைத் தெய்வமாகத் தமிழ்
வகுத்த தனியிடம்
வையம் பேண நமது மாண்பை
மலர்த்தி நின்று வாழ்கவே - வாழ்க

செயற்கரிய செய்கை சேவை சீலமோடு ஞானமும்
வியத்தகுநல் வீரம்தர்மம் வாய்மை அன்பு மேவியே
உறுதியோடு உயர்ந்த நோக்கம் நாடிக்கூடி உழைத்திட
மறுவிலாத தெய்வபக்தி மலரவாழ்வும் உதவியே - வாழ்க

அலகிலாத கலைகள் ஆய்ந்து அறிவை மேலும் வளர்த்தலின்
நலமிகுந்த நங்கையரை நயந்து ஆக்கும் பணியிலே
கலை நிலையம் நிறுவிக்காத்த மேலைநாட்டுத் தாபகர்
தலைமையான தொண்டும் பண்டத்தரிப்பு மக்கள் தானமும் - வாழ்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org